# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 71 சுபகிருது வருடம், புரட்டாசி மாதம் 11ஆம் திகதி புதன்கிழமை (28.09.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் அவ்வல் - 01 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் ஜனாதிபதி பங்கேற்பு



02 பக்கம்

## வெளிநாட்டில் தொழில்புரிவோருக்கு ஓய்வூதியம்

வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கை தொழிலாளர்களுக்கு புதிய ஓய்வூதியமுறை அறிமுகப்படுத்தப்படும் என்று தொழில் மற்றும்...

02 பக்கம்

# பாதுகாப்பு வலய வர்த்தமானி இரத்து!

### ஜனாதிபதி தரப்பில் அவசர ஆலோசனை

### ரணில் நாடு திரும்பிய பின் விசேட அறிவிப்பு

**நமது விசேட செய்தியாளர்**

கொழும்பில் பல விசேட இடங்களை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பெயரிட்டு, பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட வர்த்தமானியை செல்லுபடியற்றதாக்க தேவையான நடவடிக்கைகள் குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சட்டமா அதிபருக்கு...

02 பக்கம்

## இலங்கையில் புதிதாக விமான சேவை



இலங்கையில் சர்வதேச பயணிகள் விமான சேவைக்கென முதல் தடவையாக தனியாருக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஒக்டோபர் 05ஆம் திகதி முதலாவது பயணத்தை அந்நிறுவனம் தொடங்கவுள்ளது. ஃபிட்ஸ் எயார் (Fits Air) என்ற பெயரில் அபீர்டீன் ஹோல்டிங்ஸ் குருப்...

02 பக்கம்

## கடன் மறுசீரமைப்புக்கு ஜப்பான் ஆதரவளிக்கும்

### ஜனாதிபதியிடம் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் உறுதி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் யோஷிமாசா ஹயாஷியை டோக்கியோவில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின்போது சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் பேச்சுவார்த்தையின்...

02 பக்கம்

## நாளை கூடுகிறது தேசிய சபை

02 பக்கம்

## எரிபொருள் தொடர்பில் விசேட பரிசோதனை

### தரம் குறித்து ஆராய்கிறது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

**யோ.தர்மராஜ்**

இறக்குமதி செய்யப்படும் பெற்றோல், டீசல் போன்றவற்றின் தரம் குறைந்துள்ளதாகக் கூறி...

02 பக்கம்

## இலங்கைக்கு உதவி திரட்ட ஐ.நா. ஆதரவு

பொதுச் செயலாளர் குட்டெரெஸ் அமைச்சர் சப்ரியிடம் உறுதி



02 பக்கம்

## மேல் மாகாணத்துக்கு புதிய தமிழ் கூட்டணி

### பிரபா கணேசன் தலைமையில் ஏற்பாடு

**நமது விசேட செய்தியாளர்**

மேல் மாகாணத்துக்கென தனியான தமிழ் அரசியல் கூட்டணியொன்றை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசன் தலைமையில் இதற்கான முன்னெடுப்புகள் இடம்பெறுவதாக அறியமுடிந்தது.

02 பக்கம்

## பிரதமராக பதவியேற்றிருந்தால் கோட்டாவே இன்றும் ஜனாதிபதி

### கூறுகிறார் சரத் பொன்சேகா



**யோ.தர்மராஜ்**

நாட்டின் பிரதமராக பதவி ஏற்றுக்கொள்ளுமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை நான் ஏற்றுக்கொண்டிருந்தால், இன்றும் அவரே ஜனாதிபதியாக இருந்திருப்பார் என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு...

02 பக்கம்




புதிய அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு ஒக்டோபர் 10ஆம் திகதி நடக்குமென தெரிகிறது. அன்றைய தினம் நல்ல நாளென ஜோதிடர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனராம். புதிய ஜனாதிபதி ரணிலும் ஜோதிடத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளாராம்.

## பிரசார செலவுகளை திருத்துவதற்கு சட்டம்

### அமைச்சரவை அனுமதி பெறப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

**யோ.தர்மராஜ்**

தேர்தல் பிரசார செலவுகளை திருத்துவதற்கான சட்டமூலத்துக்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதோடு,...

02 பக்கம்

## நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் திடீர் கோளாறு

### மின்வெட்டு நேரம் அதிகரிக்கும் சாத்தியம்

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின் உற்பத்தி இயந்திரம் பழுதடைந்துள்ளது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த செயலிழப்பு ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இதன்படி மின்வெட்டு காலம் நீடிக்க வாய்ப்புள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

அதியுயர் பாதுகாப்பு வலயம் எண்ட ஒண்டு இருந்தா கோட்டா மாதிரி பின்கதவால ஓடாமல் முன்வாசல் வழியாவே பாதுகாப்பா வெளியேறலாமெண்டு ரணில் நினைச்சிருப்பாராக்கும்...




அதிதுரித

Dialog HOME BROADBAND இடமிருந்து

வீட்டிற்கு Wi-Fi ரீலோட்




இணைப்புடன் ரவுட்டர் ரூ.5990/-

புதியது மாதத்திற்கு 20GB ரூ.525/-

2 வாரங்களுக்கு 10GB ரூ.292/-

செயற்படுத்தல் ரீலோட் அல்லது MyDialog App மூலம்

Dialog எதிர்காலம் இன்றே.

# தமிழ்ச் சங்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் நடத்தும் ராஜகுலேந்திரன், கே.எஸ்.சிவகுமாரன் நினைவேந்தல்

தமிழ் இலக்கியத் துறையில் பெரும் பங்காற்றி அண்மையில் காலஞ்சென்ற சிரேஷ்ட சட்டத்தரணி ராஜகுலேந்திரன், திறனாய்வாளர் கே.எஸ். சிவகுமாரன் ஆகியோருக்கான நினைவேந்தல் நிகழ்வொன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புதிய வெளிச்சங்கள் இலக்கிய மையம், கொழும்பு 06, ருத்ரா மாவத்தையில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் எதிர்வரும் ஒக்டோபர் 02ஆம் திகதி ஞாயிறு மாலை 04 மணிக்கு நடத்தவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் தலைமையில் நடைபெறவுள்ள பிரஸ்தாப நிகழ்வில், உலக அறிவிப்பாளர் பீ.எச்.அப்துல் ஹமீத், சாஹித்ய ரத்னா மு.சிவலிங்கம், சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம்.அமீன், மருத்துவக் கலாநிதி 'ஞானம்' ஞானசேகரம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர் இந்நிகழ்வு முஸ்லிம் காங்கிரஸின் புதிய வெளிச்சங்கள் இலக்கிய மையம் தமிழுக்கு தொண்டாற்றியவர்களை நினைவுகூரும் வரிசையில் முன்னர் கவிக்கோ அப்துல் ரஹ்மான், செனட்டர் மௌலானா, எஸ்.எச்.எம்.ஜெமீல் போன்றோருக்கு நடத்திய நினைவேந்தல் நிகழ்வுத் தொடரில் ஒன்றாகும்.

# தங்கம் கடத்த முயன்றவர் விமான நிலையத்தில் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான ஒரு கிலோகிராம் எடையுள்ள 08 தங்க பிஸ்கட்டுகளை எடுத்துச் செல்ல முற்பட்ட விமான நிலைய சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் நேற்று (27) பிற்பகல் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய அதிகாரி ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கோதுமை மா தட்டுப்பாட்டினால் இரண்டாயிரம் பேக்கரிகள் மூடல்

கோதுமை மா, முட்டை உள்ளிட்ட மூலப்பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் அவற்றின் விலையேற்றம் காரணமாக நாடு முழுவதும் உள்ள இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பேக்கரிகள் முற்றாக மூடப்பட் டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

இவ்வாறு பேக்கரிகள் மூடப்பட்டு வருவதால் இத்தொழிலை நம்பி தமது வாழ்க்கையை நடத்திவந்த ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து நிர்க்கதியாகியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கோதுமை மா உள்ளிட்ட மூலப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் அவற்றின் விலையேற்றம் காரணமாக கொழும்புக்கு வெளியே உள்ள பேக்கரிகளே அதிகளவில் மூடப்பட்டுள்ளன. மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பாரிய பேக்கரிகளே அப்பகுதிகளில் இயங்கி வருகின்றன.

கோதுமை மா உற்பத்தி நிறுவனங்கள் பாரிய அளவிலான பேக்கரிகளுக்கு மாத்திரமே கோதுமை மாவை விநியோகிப்பதாகவும், சிறிய பேக்கரிகள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலேயே இயங்கி வருவதாகவும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மா தட்டுப்பாட்டின் காரணமாக வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான கோதுமை உற்பத்தியிலான உணவுப் பொருட்கள் உற்பத்தியும் பாதிக்கப்பட் டுள்ளதால் சுற்றுலாத் துறைக்கும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# க.பொ.த. உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு கோரிக்கை

க.பொ.த. உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக் குமாறு கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது தடவையாக பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோரே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வருடம் டிசம்பர் மாதம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையை நடத்துவதன் மூலம் தமக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட 6 மாதங்களானதாகவும், 3 மாதங்களில் மீண்டும் அதே பரீட்சையை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே க.பொ.த. உயர்தரப் பரீட்சையை 2 அல்லது 3 மாதங்களுக்கு ஒத்திவைக்குமாறு கல்வி அமைச்சிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தினக்குரல் ஊடகரின் தந்தை காலமானார்



ஞாயிறு தினக்குரல் உதவி ஆசிரியர் லெப்ரின் ராஜின் தந்தை கந்தப்பு நவம் நேற்று செவ்வாய்க்கிழமை தனது 63ஆவது வயதில் காலமானார்.

யாழ்ப்பாணம், நெல்லியடி, கரவெட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அன்னார் கலாநாயகியின் அன்புக் கணவரும் லெப்ரின்ராஜ், கப்ரின் ராஜ், கபில்ராஜ், ஜிரோஜிகா, நகுல்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## ஷின்சோ அபேயின்...

ஜப்பானின் மறைந்த முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கு நேற்று (27) டோக்கியோவிலுள்ள நிப்பொன் புடோக்கனில் அரச மரியாதையுடன் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

ஜனாதிபதியுடன் அவரது பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்கவும் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் அமெரிக்காவின் உப ஜனாதிபதி கமலா ஹரிஸ் உள்ளிட்ட பல வெளிநாட்டு அரச தலைவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில்...

நிறுவனம் இந்தச் சேவையை முன்னெடுக்க வுள்ளது.

இன்றைய தினம் இந்தியாவிலும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி டுபாயிலும் 10ஆம் திகதி மாலைதீவிலும் இந்த விமான சேவைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு நாட்டுக்கும் வாராந்தம் மூன்று விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இந்த விமானம் 164 இருக்கைகளைக் கொண்டதாகும்.

## பாதுகாப்பு வலய...

பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பான வர்த்தமானியை அண்மையில் வெளியிட்டார்.

ஆனால், இந்த வர்த்தமானி மூலம் கொழும்பின் மத்திய பொருளாதார வலயத்தில் வர்த்தக நடவடிக்கைகள் பாரியளவில் பாதிக்கப்படும் என பொருளாதார நிபுணர்கள் குழுவொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நீண்ட விளக்கமளித்துள்ளது.

கொழும்பில் அவ்வப்போது நடைபெறும் போராட்டங்களினால் ஏற்படும் பொருளாதார பாதிப்பு மிக அதிகமானது என்றாலும் உயர் பாதுகாப்பு வலயங்களை கட்டுப்படுத்துவதன் மூலம் வேறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும் எனவும் நிபுணர் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, இந்த அதியுயர் பாதுகாப்பு வலய அறிவிப்பை நீக்கி அதற்குப் பதிலாக புலனாய்வு அமைப்புகளை ஒருங்கிணைத்து விசேட பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை தயாரிக்குமாறு பொது பாதுகாப்பு அமைச்சின் தலைமையிலான சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த வர்த்தமானி அறிவிப்பை இரத்துச் செய்வதற்கு ஜனாதிபதியின் கையொப்பம் இடப்பட வேண்டும் என்பதால், ஜப்பான் விஜயத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என நம்பகமான வட்டாரங்கள் தெரிவித்தன.

## நாளை கூடுகிறது..

தேசிய சபை நாளை கூடவுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய சபைக்காக 35 பேர் அடங்கிய உறுப்பினர்கள் விபரத்தை கடந்த வாரம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு...

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டெரஸ் இலங்கைக்கான உதவிகளை திரட்டுவதற்கு ஐ.நாவின் ஆதரவை வழங்க முன்வந்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை யின் 77ஆவது கூட்டத்தொடரில் வெளிநாட் டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, நியூ யோர்க்கில் ஐ.நா. பொதுச் செயலாளர் என்டோனியோ குட்டெரஸை சந்தித்த போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகமும் வெளிநாட்ட லுவல்கள் அமைச்சரும் இலங்கை எதிர்கொள்ளும் சமூக பொருளாதார சவால்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்த சந்திப்பின்போது, நாடு முன்னோக்கி செல்லும்போது பேச்சுவார்த்தையின் முக்கியத்துவத்தையும் ஐ.நா. பொதுச் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, தற்போதைய சவால்களை வெற்றிகொள்வதற்கு இலங்கை எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவருக்கு விளக்கமளித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலில் இலங்கைக்கு ஐ.நாவின் மேலும் உதவிகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

## நுரைச்சோலை..

புதிய மின்வெட்டு குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு விடுத்த அறிவிப்பின்படி, இரண்டு மணிநேரம் 20 நிமிட மின்வெட்டு அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பழுதடைந்த நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின் உற்பத்தி இயந்திரத்தின் பராமரிப்புப் பணிகள் மூன்று முதல் ஐந்து நாட்கள் வரை மேற்கொள்ளப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

## பிரதமராக...

வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் பிரதமராக பதவி ஏற்றுக்கொள்ளுமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்த அழைப்பை நான் ஏற்றுக்கொண்டிருந்தால், இன்றும் அவரே ஜனாதிபதியாக இருந்திருப்பார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றுக் கொண்டதுபோன்று நானும் பிரதமர் பதவியை பொறுப்பேற்று, போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இடமளிக்கப்பட்டு, கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்குச் சென்ற பின்னர், நான் ஜனாதிபதி பதவியில் அமர்ந்திருக்கலாம் என்ற கோணத்திலேயே பார்க்கப்படுகின்றன.

ஆனால், பிரதமராக பதவி ஏற்றுக்கொள்ளு மாறு முன்னாள் ஜனாதிபதி அழைப்பு விடுத்த போது, நான் அவருக்கு சில நிபந்தனைகளை முன்வைத்தேன். நாட்டில் பாரிய பிரச்சினை இருப்பதால் நானும் நீங்களும் யதார்த்தத்தை உணர்ந்தே பேச வேண்டும் என்று கூறினேன். பிரதமராக நான் பதவி ஏற்க வேண்டும் என நீங்கள் விரும்பினால், அதற்கு முன்னர் பல விடயங்களை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினேன்.

அதன்படி, முழு நாட்டு மக்களும் உங்களை ஜனாதிபதி பதவிவை விட்டு விலகுமாறு வலியுறுத்துகின்றனர். ஆனால், விலகுவதற்கு நீங்கள் விரும்பில்லை. பிரதமராக பதவி ஏற்றுக்கொள்ளுமாறு சஜித் பிரேமதாசவுக்கு அழைப்பு விடுத்தபோதும் உங்களை பதவி விலகுமாறே கூறினார். ஆனால், அது நடக்காது என்பது எனக்கு நன்றாக புரிகிறது. நீங்களும் பதவி விலகவும் மாட்டீர்கள். வேறு யாரும் பிரதமராக பதவி ஏற்கவும் மாட்டார்கள். நாட்டின் பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்காது. எனவே, யதார்த்தத்தை புரிந்துகொண்டு, சில விடயங்களை மாத்திரம் முன்னெடுங்கள் எனக் கூறினேன்.

ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்ட 19ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டுவருவதற்கும், நீங்கள் எந்தவொரு அமைச்சுப் பதவியையும் வகிக்காதிருப்பதற்கும் எனக்கு உறுதியளித்தால், நீங்கள் ஏதேனும் சில விடயங்களை முன்னெடுக்கின்றீர்கள் என்பதை மக்களும் புரிந்துகொள்வார்கள் என கோட்டாபய ராஜபக்ஷவிடம் கூறினேன். இதனை செய்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன். ஆனால், பாதுகாப்பு அமைச்சு மாத்திரம் நான் வைத்துக்கொள்ளலாமா என என்னிடம் கேட்டார். இல்லை. முழுமையாக நீங்கள் அனைத்து அமைச்சுப் பதவிகளையும் விடுவிக்க வேண்டும். அப்போதே மக்கள் நம்பிக்கைக்கொள்வார்கள் எனவும் வலியுறுத்தினேன்.

பின்னர், எனக்கு 48 மணித்தியாலங்கள் தாருங்கள். நான் போராட்டக்காரர்கள் மற்றும் என்னுடைய கட்சியினரிடமும் பேச்சுவார்த்தை நடத்தி, நிலைமையை எடுத்துக் கூறிய பின்னர், நான் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்கின்றேன் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கூறினேன்.

இதேவேளை, நீங்கள் நாட்டு மக்களுக்கும் உரையாற்ற வேண்டும். குறிப்பாக, நாட்டு மக்களின் நம்பிக்கையை வென்ற ஒருவரை பிரதமராக பதவியேற்றுக்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றேன் எனக் கூறுங்கள், அதற்கமைய, 48 மணித்தியாலங்களில் நான் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்கின்றேன் எனவும் நான் தெரிவித்தேன்.

அதற்கும் அவர் இணக்கம் தெரிவித்து, நாட்டு மக்களுக்கும் உரையாற்றினார். ஆனால், அந்த காலப்பகுதிக்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துள்ளார். பின்னர், எனக்கு அழைப்பு விடுத்த கோட்டாபய ராஜபக்ஷ, சரத் கோபப்பட வேண்டாம். பிரதமர் பதவியை உங்களுக்கு வழங்குவதற்கு, சமல் அண்ணா மற்றும் மஹிந்த அண்ணா ஆகியோர் விரும்பவில்லை. இதனால், எனக்கும் அச்சம் வந்துவிட்டது என்றும் கூறினார்.

குறிப்பாக, 19 ஆவது திருத்தத்திற்கு அமைய பிரதமருக்கு அதிகாரம் வரும் என்பதாலும் பாதுகாப்பு அமைச்சை கைவிடுமாறும் நான் கூறியதற்கு அமைய அவர்களுக்கு அச்சம் ஏற்பட்டிருக்கலாம்.

ஒருவேளை, எவ்வித நிபந்தனைகளுமின்றி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைபோன்று நானும் பிரதமர் பதவியை ஏற்றிருக்கலாம். ஆனால், என்னுடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னர் அவருக்கே வீட்டுக்குச் செல்ல நேரிட்டது – என்றார்.

## எரிபொருள் தொடர்பில்...

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அதிகமாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதால் நாடு பூராகவுமுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாதிரிகளை பெற்று பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு காரியாலயத்தில் நேற்று (27) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிலுள்ள பெற்றோல், டீசல் போன்றவற்றின் தரம் குறைந்துள்ளதாகக் கூறி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அதிகமாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள் என. குறிப்பாக, இலங்கையில் ஆயிரத்து 200 எரிபொருள் நிரப்பு நிலையங்களே உள்ள நிலையில், எங்களுக்கு 120இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாயின், எரிபொருட்களின் தரம் குறைவு என 10 வீதமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவே, எரிபொருள் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை கையாள்கின்றன. மேலும், நுகர்வோரின் உரிமைகளையும் நாங்களே பாதுகாக்கின்றோம்.

இந்நிலையில், எங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளுக்கு அமைய அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் எரிபொருட்களின் மாதிரிகளை எடுத்து, பரிசோதனைக்கு உட்படுத்தி தரம் குறித்து உறுதிப்படுத்துமாறு உரிய தரப்புக்கு அறிவித்துள்ளோம். அதன்படி, எரிபொருள் தரம், நிறமாற்றம், நுகர்வோருக்கு குறைவான எரிபொருள் விநியோகம், மோசடிகள் குறித்து அடுத்த சில நாட்களுக்குள் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உரிய தரப்புக்கு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது – என்றார்.

## கடன் மறுசீரமைப்புக்கு...

முன்னேற்றத்தை வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி வரவேற்றார். அத்துடன் இலங்கைக்கான கடன் வழங்குனர்களுடன் நடத்தப்படும் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தையில் ஜப்பான் முன்னணி பங்கை வகிக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் கடந்த ஆட்சியில் பல முதலீட்டுத் திட்டங்களை இரத்துச்செய்ததைத் தொடர்ந்து ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது குறித்து ஜனாதிபதி விக்கிரமசிங்க இதன்போது வருத்தம் தெரிவித்தார். அந்த திட்டங்களை மீள ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களில் ஜப்பான் முதலீடு செய்ய வேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் ஆர்வம் காட்டுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களில் முதலீடு செய்வதில் ஜப்பான் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் இதற்கமைய எதிர்கால முதலீட்டு வாய்ப்புகளை இலங்கையில் மேற்கொள்வது குறித்து ஆராய தயாராக இருப்பதாகவும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி இதன்போது தெரிவித்தார்.

இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக் கான தேர்ச்சியுற்ற தொழிலாளர் பரீட்சையை 2023 ஜனவரியில் ஜப்பான் ஆரம்பிக்கும் என்றும் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச அரங்கில் இலங்கைக்கு ஜப்பான் வழங்கிவரும் ஒத்துழைப்பைப் பாராட்டிய ஜனாதிபதி, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள், நிரந்தர உறுப்புரிமை பெறுவதற்காக மேற்கொள்ளும் பிரசாரத்திற்கு இலங்கை அரசாங்கம் ஆதரவளிப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்தை வரவேற்ற ஜப்பான் வெளிவிவகார அமைச்சர், சர்வதேச அரங்கில் ஆசியாவிற்கு வலுவான பிரதிநிதித்துவம் தேவை என்றும் வலியுறுத்தினார்.

## மேல் மாகாணத்துக்கு...

தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு போன்றவை முன்னெடுக்கப்படவில்லையென பிரபா கணேசன் தரப்பில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக்கொண்டு ஜனநாயக மக்கள் காங்கிரஸ் பல்வேறுபட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பில் இன்று புதன்கிழமை மாலை பல்வேறு தரப்பினர் கூடி இறுதி முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

## வெளிநாட்டில்...

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்ந்துள்ள 18 முதல் 59 வயதுக்குட்பட்ட தொழிலாளர்களுக்கு மனுசவி என்ற ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுசவி ஓய்வூதியத் திட்டத்தில் பயனடைவதற்கு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்து வெளிநாட்டுத் தொழிலுக்காக சென்றிருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

## பிரசார செலவுகளை...

அமைச்சரவையின் அனுமதி கிடைத்தவுடன் குறித்த சட்டமூலத்தை வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அறிவிப்பதற்கும் தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜீ. புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார செலவுகளை திருத்துவதற்கான சட்டமூலம் குறித்து ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

சுயாதீனமான மற்றும் சாதாரணமான தேர்தல் நடத்தப்படும்போது தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அல்லது அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்கள் என்பன மக்கள் வாக்குகளைப் பெறுவதற்காக செலவிடும் அதிகப்படியான செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில் சட்டவரைவுத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள தேர்தல் பிரசாரங்கள் செலவை கட்டுப்படுத்தும் சட்டமூலம், சட்டமா அதிபரின் ஒப்புதலைப் பெற்றுள்ளது.

தேர்தல் சட்டமூலத்தை சீர்திருத்துவதற்காக நியமிக்கப்பட்ட தேர்தல் சட்டங்கள் குறித்த நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழு பரிந்துரைத்துள்ள தேர்தல் பிரசாரங்கள் செலவை திருத்துவதற்காக சட்ட வரைபானது, அமைச்சரவையின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதோடு, அமைச்சரவையின் அனுமதி கிடைத்தவுடன் குறித்த சட்டமூலத்தை வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அறிவிப்பதற்கும் தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது.

இச்சட்டத்தின் ஊடாக, தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்தவும், பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்தவும், தபால் மூலம் வாக்களிக்க தகுதியில்லாத, எனினும், தேர்தல் நாளில் கடமையாற்றுபவர்களுக்கு வாக்களிக்கும் வசதியை ஏற்படுத்தவும் சட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும், மக்கள் பிரதிநிதிகளுக்கான ஒழுக்க விதிகளை சட்டப்பூர்வமாக்குதல், மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதி, மக்களின் மக்களாணையை தவறாக பயன்படுத்தினால் அவருடைய பதவி காலத்தினுள் மீண்டும் அழைப்பதற்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல், வேட்பாளர்கள் முன்வைக்கும் கொள்கைகளை தொடர்பாக சட்டரீதியான பொறுப்புக்கூறலை உருவாக்குதல் மற்றும் தேர்தல் முறைப்பாடுகளை துரிதமாக தீர்ப்பதற்கு தேர்தல் நீதிமன்றத்தை நிறுவுதல் உள்ளிட்ட 07 விடயங்கள் இந்த சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரான்ஸ் தூதுவர் சபாநாயகருடன் சந்திப்பு



இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லவேர்ட் பிரியாவிடை பெற்றுச்செல்வதன் நிமித்தம் சபாநாயகரை நேற்று (27) சந்தித்தார். இச்சந்திப்பில் பிரதித் தூதுவர் ஓரிலியன் மெய்லிடும் கலந்துகொண்டிருந்தார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவும் இத்தருணத்தில் இணைந்து கொண்டார்.

# ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக ஜப்பானில் போராட்டம்



உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜப்பான் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, அந்த நாட்டில் வாழும் இலங்கையர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தங்கியுள்ள டோக்கியோ நகரின் பிரபல நட்சத்திர ஹோட்டலின் முன்பாக ஒன்றுதிரண்ட இலங்கையர்கள், ஜனாதிபதிக்கு எதிராக கோஷங்களை எழுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் ஜப்பான் வாழ் இலங்கையர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

# கிராமிய பொருளாதார மறுசீரமைப்பு – உணவு பாதுகாப்புக் குழுவுக்கு ஆலோசனைகளை முன்வைக்குக!

## அதிகாரிகளுக்கு பிரதமர் பணிப்பு



கிராமிய உத்தியோகத்தர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படும் "கிராமிய பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் உணவு பாதுகாப்புக் குழுவுக்கு" பிரதான விடயங்களை உள்ளடக்கிய ஆலோசனை அறிக்கையொன்றை வெளியிடுமாறு அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சரும் பிரதமருமான தினேஷ் குணவர்தன அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் உள்விவகாரப் பிரிவில் நேற்று முன்தினம் (26) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிராமிய பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டம் கிராமிய, பிரதேச மட்டத்தில் முதலிடம் வழங்கப்பட வேண்டிய முக்கிய வேலைத்திட்டமாகும். இது பாரிய சவாலாக இருந்தாலும் வெற்றியடையக் கூடிய சவாலாகவே அமையும்.

அரசியல் பேதமின்றி, உணவு உற்பத்தியை அதிகரித்தல், குறைந்த வருமானம் பெறுபவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக கிராமிய மட்டத்தில் ஒன்றிணைந்து செயற்பட முடியும்.

தற்போது பயிரிடப்படாத, பயிரிடக்கூடிய காணிகளை விடுவிப்பதற்கான சம்பந்தப்பட்ட சகல அரச நிறுவனங்களும் முயற்சிக்க வேண்டும். உணவு விவசாயம் மற்றும் பெருந்தோட்ட தொழிற்றுறை ஆகிய இரண்டும் கிராமிய மட்டத்தில் விருத்தியடையச் செய்வதற்கே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அந்நிய செலாவணி பிரச்சினையை சீராக்குவதற்கான தீர்வுகளை இதனூடாக பெற்றுக்கொள்ள முடியும். இது அரச பிரிவினால் மாத்திரம் தனியாக முன்னெடுக்க முடியாது. சனச போன்ற அரச சார்பற்ற பிரிவுகளும் இதற்கு ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளன. மறுபுறம், நாடுபூராகவும் உள்ள 10 ஆயிரம் பாடசாலைகளிலும் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். விவசாய உற்பத்தியில் வீழ்ச்சியை மட்டுப்படுத்துவதற்காக சந்தையில் கிராமிய மட்டத்தில் திட்டமிடப்பட வேண்டியது அவசியமாகும். பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைகளுக்காக பெருந்தோட்ட நிறுவன இடங்களை பயன்படுத்த முடியுமா என்பது குறித்தும் விரைவாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

சகல மாவட்டங்களுக்கும் பிரத்தியேகமாக சென்றாவது இந்த வேலைத்திட்டத்தை வெற்றியுடையதாக்குவேன் என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அமைச்சினூடாக தனியான பிரிவு ஸ்தாபிக்க எதிர்பார்த்துள்ளதாக அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே தெரிவித்துள்ளார்.

# சிண்டி மெக்கெய்ன் வெளிவிவகார செயலாளரால் வரவேற்பு

ரோமிலுள்ள ஐக்கிய நாடுகள் முகவர் நிலையங்களுக்கான அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி சிண்டி மெக்கெய்னை வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன நேற்று முன்தினம் (26) கொழும்பிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து சந்தித்தார்.

உணவு மற்றும் விவசாய அமைப்பு, உலக உணவுத் திட்டம் மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் போன்ற ரோமை தளமாகக்கொண்ட முகவரமைப்புகள் உட்பட இலங்கையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் நிலையான விவசாயத்தை உறுதிப்படுத்துவதற்காக தூதுவர் மக்கெய்னின் விஜயத்தினூடாக வழங்கப்பட்ட ஆதரவை வெளிவிவகார செயலாளர் விஜேவர்தன வரவேற்றார்.



உலகளவில் உணவுப் பாதுகாப்புக் கவலைகளை நிவர்த்திசெய்வதற்காக அமெரிக்கா மேற்கொண்டுள்ள சமீபத்திய நடவடிக்கை குறித்து வெளிவிவகார செயலாளரிடம் தெரிவித்த தூதுவர் மெக்கெய்ன், மக்களின் உணவு மற்றும் ஊட்டச்சத்துத் தேவைகளை உறுதிசெய்வதில் அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகளுக்குத் துணையாக இலங்கைக்கான அவர்களது நிலையான மற்றும் தொடர்ச்சியான உதவிகளை உறுதியளித்தார்.



சட்டத்தரணிகள் மற்றும் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று (27) புதுக்கடை நீதிமன்ற கட்டடத் தொகுதியின் முன்னால் இடம்பெற்றது. (படப்பிடிப்பு – கிரிஷான் காரியவசம்)

# இதழியல் - ஊடகக் கற்கைகள் டிப்ளோமா கற்கைநெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு









இதழியல் மற்றும் ஊடகக் கற்கைகள் டிப்ளோமா கற்கைநெறியின் 8 ஆவது அணியினருக்கானதும் மற்றும் இதழியல் சான்றிதழ் கற்கைநெறியின் முதலாவது அணியினருக்குமான கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இலங்கை பத்திரிகை பேரவையினால் நடத்தப்பட்டது.

குறித்த நிகழ்வானது ஊடக அமைச்சர் பந்துல குணவர்தனவின் பங்குபற்றுதலுடன் அண்மையில் ராஜகிரியவில் அமைந்துள்ள வங்கித் தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் காட்சி மற்றும் நிகழ்த்தும் கலை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி றோஹன பி. மகாலியனாராச்சி தலைமையுரையை ஆற்றினார். மேலும் இந்த நிகழ்விற்கு கற்கைநெறி ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சுனந்த மகேந்திர, பேராசிரியர் ரூடர் வீரசிங்க மற்றும் பேரவையின் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான மகிந்த பத்திரண உள்ளிட்ட பலரும் வருகைதந்திருந்தனர்.






# சாரதி நித்திரை கொண்டதால் கட்டடத்துடன் புகையிரதம் மோதி விபத்து



தெமட்டகொட புகையிரத நிலைய பகுதிக்குள் இடம்பெற்ற புகையிரத விபத்தில், பழைய கட்டடமொன்று பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.

பராமரிப்பு நடவடிக்கைக்காக குறித்த இடத்துக்கு கொண்டுவரப்பட்ட புகையிரதம், நிறுத்த வேண்டிய இடத்திலிருந்து வரம்பை மீறிச் சென்றதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், புகையிரதம் தண்டவாளத்திலிருந்து விலகி பழைய கட்டடமொன்றின் மீது மோதியுள்ளது.

புகையிரத சாரதி நித்திரை கொண்டதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் புகையிரதத் திணைக்களத்தினால் உள்ளக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இந்த விபத்தினால் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, செப்டெம்பர் 28ஆம் திகதி, புதன்கிழமை

# வரவேற்கப்படவேண்டிய இ.தொ.காவின் ஆதரவு

"பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதே உண்மையான நல்லிணக்கத்தின் முதல்படியாக அமையும்" - என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக நீக்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி, சர்வஜன நீதி அமைப்பு, தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் கையெழுத்து திரட்டப்பட்டு வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக நுவரெலியா, ரிகில்லகஸ்கட பகுதியில் நேற்று முன்தினம் (26.09.2022) கையெழுத்து திரட்டப்பட்டது. இதில் பங்கேற்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் ஜீவன் தொண்டமான் எம்.பி. கையொப்பம் இட்டார்.

அதன் பின்னர் நுவரெலியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜீவன் தொண்டமான்,

"அரசியல் வேறுபாடுகள், கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளது. இதற்கமையவே சாணக்கியன் எம்.பி. விடுத்த அழைப்பை ஏற்று மனுவில் நானும் கையொப்பம் இட்டேன்.

இற்றைக்கு 43 ஆண்டுகளுக்கு முன்னர் தற்காலிக தீர்வாகவே பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், போர் முடிவடைந்து பல வருடங்கள் கடந்தும் அந்த சட்டம் நீடிக்கின்றது. இதனை ஏற்க முடியாது. உண்மையான ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்தின் முதல்படியாக அச்சட்டத்தை நீக்க வேண்டும்.

இது தொடர்பில் நாம் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். பயங்கரவாத தடைச் சட்டத்தை இ.தொ.கா. தற்போது எதிர்க்கவில்லை. முன்னர் இருந்தே எதிர்த்து வருகின்றோம். எமது மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் நீதிமன்றம்கூட சென்றுள்ளார்" - என்றும் குறிப்பிட்டுள்ளார் ஜீவன் தொண்டமான்.

சட்ட அடக்குமுறைகளை நேரில் கண்டவர்களாக கருதப்படும் இலங்கை அரசியலின் மூத்தவர்களான அமரர் கள் இராசமாணிக்கம், சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோரின் இளைய தலைமுறை இன்று அடக்கு முறைகளுக்கெதிரான போராட்டத்தில் ஒன்று சேர்ந்திருப்பது காலத்திற்கு ஏற்ற சாலப்பொருந்திய நடவடிக்கை. காலத்துக்குக் காலம் இவ்வகையான அடக்குமுறை சட்டங்களால் பாதிக்கப்பட்டது தமிழ் பேசும் மக்கள்தான் என்பதை மறந்துவிட முடியாது.

வடக்கு - கிழக்கில் தானே பெரும்பாதிப்பு இருக்கிறது. பெருந்தோட்டப்பகுதிகளில்அப்படி ஒன்றுமில்லையே என்று நினைத்தோ அல்லது இப்படிச் செய்தால் அரசுடன் பகைமை வந்து விடும் என்று கருதியோ இதை தட்டிக்கழிக்காமல், நேரடியாகவே சென்று கையொப்பமிட்டமைக்காக இலங்கை தொழிலாளர் காங் கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் பாராட்டப் படவேண்டியவர். தனது பூட்டன் சௌமியமூர்த்தி தொண்டமான் எப்படி வடக்கு - கிழக்கு தமிழர் பிரச்சினையில் அவர்களின் நியாயம் பக்கம் நின்றாரோ, அதேவிதமாக ஜீவன் நிற்பதை நிச்சயம் வரவேற்கவேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டம் பெருந்தோட்டப் பகுதிகளிலும் ஏராளமான துன்பங்களையும், கேடுகளையும் தந்திருக்கிறது என்றால் அது மிகையல்ல. அமரர் சந்திரசேகரன் உட்பட எத்தனையோ இளைஞர்கள் வகை தொகையின்றி கைதுசெய்யப்பட்டு இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டனர். பயங்கரவாத தடைச் சட்டம் மலையகத்தில், வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல, முழு நாட்டையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. கடந்த காலங்களில் தமிழ் அரசியல் தலைவர்கள் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போது, இதனால் சிங்கள மக்களும் எதிர்காலத்தில் பாதிக்கப்படுவார்கள் என தொடர்ச்சியான கருத்துகளை தெரிவித்திருந்தனர். சிங்கள பகுதிகளிலும் இராணுவ முகாம்கள் உருவாகும் என, சிறையில் வைத்து கொலைசெய்யப்பட்ட குட்டிமணி என அழைக்கப்படும் செல்வராஜா யோகச்சந்திரன் குட்டிமணி தெரிவித்திருந்ததையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பயங்கரவாத தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட விடயம். கடந்த ஆட்சிக்காலத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி வேறொரு சட்டத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்திருந்தது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படுகின்ற வரை அதனை உபயோகிக்க மாட்டோம் என சர்வதேச சமூகத்திற்கு வாக்குறுதி கொடுத்திருந்த போதும், திடீரென மீண்டும் பயங்கரவாத தடைச் சட்டத்தை கையில் எடுத்துள்ளது.

காலாவதியாகி இருக்க வேண்டிய பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற போதும், பயங்கரவாத தடைச் சட்டத்தை உபயோகிக்க ஆரம்பிப்பது மிகவும் மோசமான அடிப்படையாக கருத்தப்பட வேண்டியுள்ளது. அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு இது குறித்து பதில் சொல்ல வேண்டியிருக்கும்.

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக மட்டுமல்ல, தமிழர்களின் இதர அனைத்து பிரச்சினைகளுக்கு எதிராகவும் பெருந்தோட்ட அரசியல் கட்சிகளும்,ள வடக்கு - கிழக்கு மற்றும் கொழும்பைத் தளமாக கொண்ட அரசியல் கட்சிகளும் கூட்டாக செயற்படவேண்டும். அதுவே காலத்தின் தேவை. அந்தவகையில் அவ்வாறான ஒன்றுக்கு கால்கோளிடும் வகையில் இ.தொ.கா. செயற்பட முன்வந்திருப்பது வரவேற்புக்குரியது.



# தற்கொலைகள் அதிகரிப்பு ஏன்?

உலகளாவிய ரீதியில் தற்கொலை மரணங்கள் தீவிர சுகாதார பிரச்சினையாக மாறிவருவதுடன், தடுக்க முடியாத சாபக்கேடாகவும் மாறிவருகின்றன.

உலகில் இடம்பெறும் ஒவ்வொரு 100 இறப்பிலும், ஒருவர் தற்கொலையால் இறப்பதாக உலக சுகாதர ஸ்தாபனம் சுட்டிக்காட்டுகின்றது. ஒவ்வோர் ஆண்டும் போர், மார்பகப் புற்றுநோய், மலேரியா, கொலை, எச்.ஐ.வியினால் இறப்பவர்களை விட தற்கொலையால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அன்றாடம் நாம் கடந்து செல்லும் மரணங்களில் பெரும்பாலான மரணங்கள் எவ்விதமான பாதிப்புகளையும் எம்மில் ஏற்படுத்துவதில்லை. பிறப்பு என்பதை எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றோமோ, அதேபோன்று இறப்பு என்பதையும் ஏற்றுக்கொண்டு அவற்றை சாதாரணமாக கடந்து விடுகின்றோம். ஆனால், எமது சூழலில் எமது சமூகத்தில் இடம்பெறும் தற்கொலை மரணங்களை நாம் சாதாரணமாக கடந்து விடுவதில்லை.

பொதுவாக தற்கொலை செய்து கொண்டவர் எம் உறவினராகவோ, நண்பராகவோ இல்லாவிட்டாலும், அவரது மரணம் எமது மனதில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அவருடைய மரணத்திற்கான காரணத்தை நோக்கி எமது அவதானம் செல்லும் இவ்வாறான மனநிலை சில நேரங்களில் ஒரு சில நாட்களில் மறக்கப்பட்டாலும், சில நேரங்களில் அந்த மனநிலையில் இருந்து மீள்வது கடினமாக இருக்கலாம். அந்த மரணத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சி மீள முடியாத வலியை தொடர்ந்து தந்து கொண்டே இருக்கலாம்.

ஒரு நபர் தன்னுடைய சுய விருப்பத்தின் காராணமாக தன்னுடைய உயிரை மாய்த்து கொள்வதையே நாம் பொதுவாக தற்கொலை என கொள்கின்றோம். தற்கொலை தொடர்பான பல விழிப்புணர்வு செயற்பாடுகள் மற்றும் மருத்துவ சிகிச்சைகள் முன்னோக்கி கொண்டு செல்லப்பட்டாலும், தற்கொலை மரணங்களும், தற்கொலை முயற்சிகளும் அதிகரித்தே செல்கின்றது

மன ரீதியான தாக்கத்தின் உச்சநிலையில் அதை எதிர்த்து போராடமுடியாத நிலையில், பெரும்பாலானவர்கள் மாற்று வழிகள் இன்றி தங்கள் உயிரை மாய்த்துக்கொள்கின்றார்கள்.

இன்னும் சிலர் மன அழுத்தம், மன ரீதியான தாக்கம், குடும்ப சூழல், விரக்தியான தன்மை போன்ற காரணங்களால் தற்கொலை செய்து கொள்கின்றார்கள்.

ஆனாலும், தற்கொலையை விட ஆபத்தானது தற்கொலை எண்ணம்.

தற்கொலை எண்ணம் ஒரு நபருக்கு வந்து விட்டால் அவர் தற்கொலை செய்வதற்கான முயற்சிகளை தொடர்சியாக மேற்கொண்டு வருவார். அவ்வாறான தற்கொலை எண்ணத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே இறுதியில் தற்கொலையை கையில் எடுக்கின்றார்கள்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆறிக்கையின் படி ஒவ்வொரு ஆண்டும் 700,000 க்கும் அதிகமானோர் தற்கொலையால் இறக்கின்றார்கள். அதேநேரம் அதைவிட 20 மடங்கு நபர்கள் தற்கொலைக்கான முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

ஒவ்வொரு தற்கொலைக்கும், 20 க்கும் மேற்பட்ட தற்கொலை முயற்சிகள் இடம் பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

15-19 வயதுக்குட்பட்டவர்களின் மரணத்திற்கு நான்காவது முக்கிய காரணமாக தற்கொலை சுட்டிக்காட்டப்படுகின்றது. உலகளாவிய தற்கொலைகளில் 77% வீதமானவை வருமானம் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் நிகழ்கின்றது என அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது

நீண்டநாள் மனநல பிரச்சினை , மனச்சோர்வு, மதுப் பழக்கம் போன்ற தொடர்காரணங்களால் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் இவ்வாறான தற்கொலைகள் அதிகளவில் இடம் பெறுகின்றன ,

இன்னும் பல தற்கொலைகள் நெருக்கடியான தருணங்களில் ஏற்படும் மனக்கிளர்ச்சியினால் நிகழ்கின்றன. நிதி சுமை, கடன் தொல்லை போன்ற தொடர்ச்சியான வாழ்க்கை அழுத்தங்களைச் சமாளிக்கும் திறன் குறைவதாலும், உறவு முறிவு அல்லது நாட்பட்ட வலி மற்றும் நோய் காரணமாகவும் தற்கொலைகள் இடம் பெறுகின்றது

கூடுதலாக மோதல், பேரழிவு, வன்முறை, துஷ்பிரயோகம் அல்லது இழப்பு மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட உணர்வு என்பன அதிகளவில் தற்கொலைக்கு வழிநடத்துகின்றன. அத்துடன் அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் போன்ற பாகுபாட்டை அனுபவிக்கும் குழுக்களிடையே தற்கொலை விகிதங்களும் அதிகமாக காணப்படுகின்றன என்பதாகவும் சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டுகின்றது.

மேலும் பழங்குடி மக்கள், லெஸ்பியன், ஓரினச்சேர்க்கை, இருபாலினம், திருநங்கை, இன்டர்செக்ஸ் (LGBTI) நபர்கள் மற்றும் கைதிகள் மத்தியிலும் தற்கொலைக்கு துண்டும் காரணிகள் அதிகமாக காணப்படுவதாகவும் தரவுகள் தெரிவிக்கின்றன

உலகளாவிய தற்கொலைகளில் சுமார் 20 வீதமானவை பூச்சிகொல்லிகள், சுயவிஷம் என்பவற்றை பயன்படுத்துவதன் ஊடாக ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் பெரும்பாலானவை குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் உள்ள கிராமப்புற விவசாய பகுதிகளில் நிகழ்கின்றன என அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றது

உலகளாவிய ரீதியில் பால் ரீதியான தற்கொலைக்கணிப்பின் படி பெண்களை விட இரண்டு மடங்கு அதிகமான ஆண்கள் தற்கொலையால் இறக்கின்றனர்.

ஒரு இலட்சம் ஆண்களில் 12.6 ஆண்கள் தற்கொலையால் இறப்பதாகவும், ஒரு இலட்சம் பெண்களில் 5.4 பெண்களும் தற்கொலையால் இறப்பதாகவும் அறிக்கைகள் மூலம் குறிப்பிடப்படுகின்றது. (100,000 ஆண்களுக்கு 12.6 மற்றும் 100,000 பெண்களுக்கு 5.4).

ஆண்களிடையே தற்கொலை விகிதம் பொதுவாக அதிக வருமானம் உள்ள நாடுகளில் அதிகமாக உள்ளது (100,000க்கு 16.5).

பெண்களைப் பொறுத்தவரை, குறைந்த-நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் (100,000 க்கு 7.1) அதிக தற்கொலை விகிதங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான பின்னனியில் இலங்கையில் இடம் பெறும் தற்கொலைகளை எடுத்துக்கொண்டால், உலகின் மற்ற பகுதிகளை போன்றே பெண்களை விட அதிகளவான ஆண்களே இலங்கையிலும் தற்கொலையால் அதிகம் இறக்கின்றார்கள்.

பதிவாளர் நாயகத் திணைக்களத் தரவின் பிரகாரம் 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு முன்னர் இலங்கையில் தற்கொலை விகிதம் ஒரு இலட்சம் பேருக்கு 9 ஆக இருந்ததாகவும், இது 1970 களில் ஒரு இலட்சத்திற்கு 19 ஆகவும், 1980 களின் நடுப்பகுதியில் ஒரு இலட்சத்துக்கு 33 ஆகவும் உயர்ந்துள்ளதாகவும் சுட்டிகாட்டியுள்ளது.

மிக சமீபத்திய புள்ளி விபரங்களின்படி இலங்கையின் ஒரு இலட்சம் நபர்களில் 15 பேர் தற்கொலை செய்து கொள்வதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது

இவ்வாறான நிலையில், தற்கொலையை இல்லாதொழிப்பதென்பது நடைமுறை சாத்திய மற்றதாக கருதப்பட்டாலும், தற்கொலை எண்ணிக்கைகளை குறைத்தல் என்பதும், தற்கொலை முயற்சிகளை தடுத்தல் என்பதும் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுமேயானல் நாடளாவிய ரீதியில் மாத்திரம் இன்றி சர்வதேச ரீதியிலும் தற்கொலைக்கு எதிரான சிறப்பான பாதுகாப்பு திட்டமாக அது அமையும்.

வளர்முக நாடுகளை போல தற்கொலைக்கு எதிரான சிறப்பான முன்னெடுப்புகள் நம் நாட்டில் இல்லாத போதிலும், தற்கொலைகளை குறைப்பதற்கான தீவரமான நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமானதொன்றாகும்.

குறிப்பாக இவ்வாறான தற்கொலை தடுப்பு நடவடிக்கைகளில் அரசாங்கம் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் பங்களிப்பைப் பார்க்கிலும் ஒவ்வொரு தனி நபரின் பங்களிப்பும் மிக முக்கிய மானதொன்றாகும். அதே நேரம் ஊடகங்களின் செயற்பாடும் கவனிக்கப்படத்தக்கதொன்றாகும்.

எமது சமூகத்தில் பொதுவாக தற்கொலை தொடர்பான தவறான பார்வைகளும், தவறான புரிதலும் மாற்ற முடியாத ஒன்றாக காணப்படுகின்றது. பொதுவாக தற்கொலை செய்துகொள்பவர்கள் கோழைகள் என்ற எண்ணப்போக்கை மாத்திரமே சமூக ரீதியில் பரிமாறிக்கொள்கின்றோம்.

ஆனாலும், பெரும்பாலும் தற்கொலை செய்து கொள்பவர்கள் எல்லோரும் கோழைகள் அல்ல. அவர்கள் சமூகத்தாலும், அவர்களை சூழ்ந்துள்ள பிரச்சினைகளாலும் நெருக்கடிகளாலும் கோழைகளாக ஆக்கப்படுகின்றனர். அதை நாம் புரிந்து கொள்வது தற்கொலைகளை தடுப்பதற்கான சிறந்த வழியாகும்.

அவர்கள் மன பலவீனத்தால் மட்டும் தற்கொலை செய்து கொள்வதில்லை. அவர்களின் நண்பர்கள், குடும்பம், அவர்கள் வாழும் சூழல், வாழும் சமூகத்திலிருந்து அவர்களுக்கு வரும் எதிர்மறையான பல சவால்களை எதிர்கொண்டு அதன் பின் ஏற்படும் விரக்தி, இயலாமை அதிகப்படியான மனச்சோர்வு என்பதன் மூலம் ஏற்படும் தொடர் நெருக்கீடுகளின் காரணமாகவே தற்கொலை செய்து கொள்கின்றனர்.

தற்கொலை தொடர்பான எண்ணம் ஒருவருக்கு சடுதியாக ஏற்படுவதில்லை. அவை பல நாட்கள் அவர்களின் எண்ணத்தில் உருவாகி, அதன் பின் அவை செயல் வடிவம் பெற்றே தற்கொலை முயற்சியாக மாறுகின்றது.

தனி நபர்களாக நாம் ஒவ்வொருவரும் நினைத்தால், நம் கண்முன் இன்னும் ஒரு உயிர் பறிபோவதை தடுக்க முடியும். அதற்காக நாம் கட்டாயம் உளவியலாளர்களாகவோ அல்லது படித்தவராகவோ இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

நம்மிடம் ஒருவர் பேசும்பொழுது அவரின் உரையாடல் மற்றும் உடல் மொழியை சரியாக புரிந்து கொள்பவராகவும், செவிமெடுப்பவராகவும் இருந்தாலே போதும். அவர்களின் மனநிலையையும், அவர்கள் தற்போது இருக்கும் அந்த நெருக்கடி நிலைமையையும் நாம் புரிந்து கொண்டால் அவர்களை நிச்சயம் காப்பாற்ற முடியும்

இதற்கு முதல்படி, தற்கொலை பற்றிய விழிப்புணர்வை, எமது குடும்பத்தில், எமது சமூக வட்டத்தில் ஏற்படுத்தி தற்கொலை, மனச்சோர்வு என்பவற்றை மனநல மருத்துவ சிகிச்சை முறைகளால் குணப்படுத்த முடியும் என்பதை அனைவரையும் உணர செய்ய வேண்டும்.

நாம் அன்றாடம் சந்திக்கும் நண்பர்களோ, உறவினர்களோ வழமை போன்று உற்சாகம் இன்றியும், எதிர்காலத்தின் மீது நம்பிக்கையை இழந்தும் பேசுகிறார்கள் என்றால் அவர்களை விட்டு விலகாதீர்கள். அவர்களுடைய மனதில் எதிர்மறை எண்ணங்கள் புதைந்து கிடக்கின்றனவா என்பதை அன்பாக பேசி கண்டறிய முயலுங்கள்.

உலகில் என்ன செய்வது என்று தெரியாமல் தற்கொலை என்ற தவறான முடிவை எடுக்கும் பலருக்கு எமது ஆறுதலான வார்த்தையும், அவர்களுடன் செலவு செய்யும் நிமிடங்களும் அவர்களின் வாழ் நாட்களையும், நம்பிக்கையையும் அதிகமாக்கும் என்பது உண்மை.

பல நேரங்களின் எம் ஆறுதலான வார்த்தையும், அவருக்காக நாம் கொடுக்கும் முக்கியத்துவமும் அவரிடன் காணப்படும் தற்கொலை எண்ணத்தை முற்றாக மாற்றலாம்.

எம் ஆறுதலினால், நாம் கொடுக்கும் நேரத்தினால், ஒருவரின் தற்கொலை எண்ணம் மாறி, அவர் உற்சாகத்துடன் மீண்டு, சமூகத்தோடு இணைந்து, சவால்களை சமாளிக்கும் அந்த மாற்றம் நமக்கு ஏற்படுத்தும் மனநிறைவை வேறு எதுவும் கொடுத்து விட முடியாது.

திறந்த உரையாடல், அன்பான கவனிப்பு, ஆறுதலான பேச்சு என்பது தற்கொலைக்கு எதிரான சிறந்த ஆயுதமாகும். தற்கொலையை தடுப்பதற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு உண்டு என்பதை மனதில் கொள்வோம். எம்மாலான எல்லா முயற்சிகளையும் தற்கொலைக்கு எதிராக எடுப்போம்.

நீங்கள் ஒருவர் மீது கொள்ளும் அக்கறை ஒருவரின் உயிரை காப்பாற்றும் என்றால் அதுவே நீங்கள் தற்கொலைக்கு எதிராக மேற்கொள்ளும் ஆகச்சிறந்த முயற்சியாகும்.

**ஜோசப் நயன்**

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- ★ 1795 – யாழ்ப்பாணத்தை ஜெனரல் ஸ்டூவர்ட் தலைமையிலான பிரித்தானியப் படைகள் கைப்பற்றின.
- ★ 1889 – நிறை மற்றும் அளவைகளுக்கான பொது மாநாட்டில் மீற்றரின் நீளமானது, பனிக்கட்டியின் உருகுநிலையில் 10 பாகை இரிடியம் கலந்த பிளாட்டினம் கலவையின் கோல் ஒன்றின் இரண்டு கோடுகளுக்கிடையேயான நீளத்துக்கு சமனாக அறிவிக்கப்பட்டது.
- ★ 1928 – அலெக்சாண்டர் பிளெமிங் தனது ஆய்வுகூடத்தில் பாக்டீரியாக் கொல்லி ஒன்று வளர்வதை அவதானித்தார். இது பின்னர் பெனிசிலின் எனப் பெயர் பெற்றது.
- ★ 1951 – சி.பி.எஸ். நிறுவனம் முதலாவது வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை பொதுமக்களுக்கு விற்பனைக்கு விட்டது. ஆனாலும், ஒரு மாதத்தினுள் இப்பெட்டிகள் விற்பனையிலிருந்து எடுக்கப்பட்டன.
- ★ 1993 – யாழ்ப்பாணத்தில் கிளாலிப் பாதையை மூடும் இலக்குக் கொண்ட 'யாழ்தேவி இராணுவ நடவடிக்கை' விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.
- ★ 1994 – பால்ட்டிக் கடலில் சென்று கொண்டிருந்த எஸ்தோனியா என்ற பயணிகள் கப்பல் மூழ்கியதில் 852 பேர் உயிரிழந்தனர்.
- ★ 2005 – ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடைசெய்தது.

# எகிப்து காலநிலை மாநாட்டில் இலங்கை முக்கிய வகிபாகம்

## முன்னாயத்த நடவடிக்கைக்கு வழிநடத்தல் குழு நியமனம்





எகிப்தில் நடைபெறவுள்ள COP 27 மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கை தீர்மானித்திருப்பதால், இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக வழிநடத்தல் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் தலைமையில் நேற்று முன்தினம் (26) நடந்த கூட்டத்திலே இந்த வழிநடத்தல் குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க, இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சாராஹல்டன், யு.என்.டி.பியின் பிரதி வசிப்பிடப் பிரதிநிதி கிரிஸ்டி யன்ஸ்கூங், இலங்கைக்கான எகிப்து தூதுவர் மேஜட்மொஷ்லி மற்றும் யுனிசெபின் இலங்கை பிரதிநிதி மெலின் ஹேர்விங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்ததாவது,

எகிப்தில் நடைபெறவுள்ள காலநிலை மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கை தீர்மானித்துள்ளது. ஐ.நா. காலநிலை கொள்கைக்கேற்ப நடைபெறும் இம்மாநாடு நவம்பர் 07 முதல் 18 வரை நடைபெறுகிறது. இதில் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வழிநடத்தல் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் சமூகத்தின் பல்துறைசார் பிரதிநிதிகள், தனியார் துறையினர், இளைஞர்கள், சூழலியலாளர்கள் மற்றும் பெண்கள் உள்வாங்கப் பட்டுள்ளனர். பசுமைப் புரட்சியில் இலங்கைக்கு பழுத்த அனுபவங்கள் உள்ளன. தாவரங்களை பாதுகாக்கும் செயற்பாடுகளுக்கு இலங்கையின் ஆசீர்வாதம் உள்ளது. இந்நியதிகளின் நிலைப் பாட்டிலேயே, இம்மாநாட்டில் இலங்கை பங்கேற்கிறது.

மேலும், இம்மாநாடு குறித்த விழிப்புணர்வுகளை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அத்துடன், காலநிலை மாற்ற சவால்களை வெற்றிகொள்ளவும் பசுமைப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் முடியுமென இலங்கை நம்புவதாக அவர் தெரிவித்தார்.

எகிப்தில் நடைபெறும் இக்காலநிலை மாநாடு குறித்து எகிப்து தூதுவர் தெரிவித்ததாவது,

பல்துறை சார்ந்தோரை உள்வாங்கி, இதுபோன்ற பல மாநாடுகளை நடத்துவதற்கு எகிப்து தயாராகவுள்ளது.

காலநிலையை சவாலுக்குட்படுத்தும் சூறாவளி, பஞ்சம் மற்றும் வெள்ளம் என்பவற்றிலிருந்து பாதுகாக்கும் வினைத்திறன் உள்ள வியூகங்களை உள்வாங்குவதற்கு இம்மாநாட்டுடன் இணைந்த தழுவல்குழு தயாருடன் உள்ளது. பரிஸ் காலநிலை கொள்கையின் தீர்மானங்களை ஊக்குவிக்கும் சகல செயற்பாடுகளை உள்வாங்க எகிப்து தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

# சேவைநலன் பாராட்டு விழா









(இக்பால் அலி)

நமது வரலாற்று ஆளுமைமிக்க சான்றோர்கள் வாழும்போதே வாழ்த்தப்பட வேண்டும். அதற்குரிய மன எண்ணங்களும் பக்குவமும் அவர்களிடத்தில் அமைந்திருத்தல் அவசியமாகும் - என்று அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி தெரிவித்தார்.

அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் அஷ்ஷெய்க் எச்.உமர்தீனின் கடந்த 35 வருட கால சேவையைப் பாராட்டி மாபெரும் சேவைநலன் பாராட்டு விழா நேற்று முன்தினம் (26) கண்டி கட்டுகலை ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது.


அல்-புர்க்கானிய்யா அரபுக் கல்லூரியின் நிர்வாகம், ஆசிரியர் குழு, கல்லூரியின் பழைய மாணவர் குழு மற்றும் அதிபர், கண்டி சிட்டி ஜம்மிய்யதுல் உலமா, கண்டி சிட்டி மஸ்ஜித் சம்மேளனம், கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம், கண்டி ஜனாஸா நலன்புரிச் சங்கம், கண்டி மலே பள்ளிவாசல் ஆகிய அமைப்புகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி மற்றும் அஷ்ஷெய்க் ஏ.சி.எம்.ஜிப்ரி ஹஸ்ரத், கௌரவ அதிதியாக பாகிஸ்தான் நாட்டின் வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்காரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கண்டி ஓராபி பாசா நிலையத்தின் பணிப்பாளர் எச்.சலீம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள், உலமாக்கள். பள்ளிவாசல்களின் நிர்வாகிகள் என பெரு எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டனர்.

இதில் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் அஷ்ஷெய்க் எச்.உமர்தீனுக்கு பல்வேறு இஸ்லாமிய நிறுவனங்கள், பள்ளிவாசல்கள், அரபுக் கல்லூரிகள் மூலம் பொன்னாடை போர்த்தி விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ராஜபக்ஷவின் கைப்பாவையே ஆட்சியில் இருக்கிறார்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குருநாகலில் தெரிவிப்பு



ராஜபக்ஷவின் மனிதாபிமானமற்ற ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந் தனர். மக்களால் நிராகரிக்கப்பட்டு விரட்டப் பட்ட பின்னர், தற்போது ராஜபக்ஷவின் கைப்பாவையொருவரே ஆட்சியில் இருக்கிறார். அந்தக் கைப்பாவையை அரசாங்கம் பொதுமக்களுக்காக பயன்படுத்துவது போன்று, தேர்தலுக்கும் பயன்படுத்தப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்டம், கட்டுகம்பளை தேர்தல் தொகுதிக் கூட்டம் நேற்று முன்தினம் (26) இடம்பெற்றது. இந்நிகழ்வில், கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கட்டுகம்பளை தொகுதியின் பிரதான அமைப்பாளர் அசங்க பெரேராவினால் இக்கூட்டம் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அந்த அச்சத்தின் காரணமாகவே பல்வேறு சட்டங்கள், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, மக்கள் ஒடுக்கப்படுகின்ற னர். எதிர்க்கட்சி என்றவகையிலும், ஐக்கிய மக்கள் சக்தி என்ற ரீதியிலும் நாம் எந்நேரத்திலும் தேர்தலுக்குத் தயாராக உள்ளோம்.

விவசாயம், பெருந்தோட்டம், மீன்பிடி, சுயதொழில் போன்ற அனைத்து துறைகளி லிருந்தும் டொலர்களை உருவாக்கும் வாய்ப்பு உள்ளது. உணவில் தன்னிறைவு பெறுவதுபோல், உணவுக்கான பெறுமதிசேர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஏற்றுமதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவே, ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால தொலைநோக்கு.

மக்கள் அபிப்பிராயத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தாத தற்போதைய அரசாங்கத்தின் 134 பேர் ராஜபக்ஷ குடும்பத்தின் திருட்டு களை காக்கும் அரணாக மாறியுள்ளனர். பல்வேறு அடக்குமுறைகளைப் பயன்படுத்தி மக்களை ஒடுக்குகிறார்கள். மருத்துவமனைகளில் மருந்துகள் இல்லாத இச்சந்தர்ப்பங்களிலயே இதுபோன்ற செயல்களை மேற்கொள்கின்றனர்.

சத்தான உணவின்றி பாடசாலை மாணவர்கள் மயக்கத்தில் கீழே விழும் நேரத்தில் அவர்களுக்கு உதவுவதைவிடுத்து அரசாங்கம் பல்வேறு அடக்குமுறைகளை பிரயோகித்து வருவகிறது.

கண்ணீரைச் சொந்தமாக்கிக்கொண்ட மக்கள் மீது மேலும் கண்ணீர் புகைக்குண்டு களை வீசும் இந்தக் கேலிக்கூத்துகளை இந்த அரசாங்கம் நிறுத்தி, மக்களின் குரலுக்கு செவிசாய்த்து மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் - என்றார்.

# அத்தாட்சிப்படுத்தல் சேவைகளுக்கான மின்னியல் சந்திப்பு நியமன முறைமை நாளைமுதல் அறிமுகம்

மின்னியல் சந்திப்பு நியமன முறைமையை எஸ்.எல்.டி. மொபிடெல் உடன் இணைந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு நாளை (29) முதல் அறிமுகப்படுத்தவுள்ளது. இது கொன்சியூலர் அலுவல்கள் பிரிவின் சரிபார்ப்பு மற்றும் அத்தாட்சிப்படுத்தல் பிரிவில் சிறந்த மற்றும் பயனுள்ள சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பொதுமக்களுக்கு வசதியளிப்பதாக அமையும்.

மின்னியல் சந்திப்பு நியமன முறைமையானது, கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு, யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, குருநாகல் மற்றும் மாத்தறையில் உள்ள அதன் பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்களில் ஆவணங்களை அத்தாட்சிப்படுத்துவதற்கான இணையவழி நியமனங்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்வதனை எளிதாக்கும்.

மின்னியல் சந்திப்பு நியமன சேவையைப் பெற விரும்புபவர்கள் 225 (கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்கள்) அல்லது 1225 (நிலையான அழைப்புத் தொலைபேசி பாவனையாளர்கள்) மற்றும் மொபிடெல் மின்னியல் சந்திப்பு (www.echannelling.com)க்கு அழைத்து நியமனங்களைப் பெற்றுக் கொள்ளலாம். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (www.mfa.gov.lk) ஊடாகவும் தொடர்புகொள்ள முடியும்.

சேவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களை கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு மற்றும் அதன் பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்களின் அனைத்து அத்தாட்சிப்படுத்தல் பிரிவுகளும் நாளைமுதல் மின்னியல் சந்திப்பு நியமன முறைமை மூலமாக மட்டுமே ஏற்றுக்கொள்ளும்.







கொழும்பு 13, ஜெம்பட்டா வீதி அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் முத்துமாரியம்மன் தேவஸ்தான நவராத்திரி விழாவின் ஆரம்ப நாள் நிகழ்வில் நவாவரண ஸ்ரீ சக்கர பூஜை, முத்தேவியர் ஹோமம் ஆகியன ஆலய பிரதம குரு சிவஸ்ரீ செ.சிவநேசன், சிவஸ்ரீ வைத்தியநாத வைகுந்தன் சிவாச்சாரியார், பிரம்மஸ்ரீ சி.ஜயபூஜீதன் சர்மா ஆகியோரால் நடத்தப்படுவதையும் கலந்துகொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: ஏ.எஸ்.எம்..ஜாவித், எம்.நசார்)

# தியாகி திலீபனின் ஆவி பேசுகிறது..!



அடுத்த ஆண்டும் எனது பெயரால் அரசியல் செய்யாதீர்கள்!

மண்ணை நேசித்தே நான் மகா தியாகம் செய்தேன்!
மாற்றானின் தூற்றுதலுக்கு தீனி போடாதீர்கள்!
என்னை நினைவுகூர்ந்து நீங்கள் சண்டை செய்யாதீர்கள்!
மக்களை அழைத்துவைத்து மரியாதை குறைக்காதீர்கள்!

பொதுச்சுடர் ஏற்றும்போது பொறாமையை கண்டுகொண்டேன்!
மலர்தூவும்போதினிலே மல்லுக்கட்டுவதை பார்த்தேன்!
மௌன அஞ்சலி செய்யும்போது வீண் சண்டை அறிந்தேன்!
மதத்தலைவருக்கு ஏசியதை என் காதுகளால உணர்ந்தேன்!

பறவைக்காவடியாய் பற்றுடனே வந்த இரு இளைஞர்கள்!
வணக்கம் செலுத்த வழிவிடாமல் தடுத்ததே ஒரு கூட்டம்!
அஞ்சலி செலுத்த ஆவலுடன் திரண்டு வந்த எம்மவர்கள்!
உங்கள் கூத்தைப்பார்த்து ஓடியது புரியல்லையா!

ஆகுதியான உறவுகளை அடி பிடிபட்டு அஞ்சலிக்காதீர்கள்!
ஆன்மாவை அழவைத்து வேடிக்கை பார்காதீர்கள்!
அமைதியாய் முடிந்தால் தீபம் ஏற்றி மலரஞ்சலி செய்யுங்கள்!
அடுத்த ஆண்டும் எனது பெயரால் அரசியல் செய்யாதீர்கள்!

- அம்பிளாந்துறையூர் அரியம் -

ශ්‍රී ලංකා මහ බැංකුව / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA

## 27.09.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 12 787 | 130 7203 |
| கனேடியன் டொலர் | 15 0128 | 160 7778 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38 1252 | 41 10 7 |
| யூரோ | 232 5 43 | 247 1315 |
| ஜப்பான் யென் | 1 36 5 | 1 4612 |
| சிங்கப்பூர் டொலர் | 137 4357 | 148 4 7 |
| ஸ்ரேலிங் பவுன் | 273 3826 | 288 8814 |
| சுவிஸ் பிரான்ங் | 247 2846 | 264 4427 |
| ஐ.அ.டொலர் | 248 0765 | 258 8260 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 851 3735 |
| குவைட் | குவைட் தினார் | 0,058 0255 |
| ஓமான் | ஓமான் றியால் | 831 4741 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 20 3 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 4 20 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 6883 |

திகதி 26.09.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4890
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,181,330.00
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 7 5 2 3 8 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.16,239,412.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3132
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,536,380.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 12 45 63 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.78,393,878.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1345
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,752,600.00
வெற்றி இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 3 3 0 8 7 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,070,569.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 920
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,680,280.00
வெற்றி இலக்கினம் E வெற்றி இலக்கங்கள் 11 35 67 82
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 127,110,745.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 199
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.7,163,620.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 05 21 49 58 விசேட இலக்கினம் மேஷம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,562,199.80

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1238
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,392,240.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.272,609,378.00
X 25 07 30 60 61
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# 30 வருடங்களாக புனரமைக்கப்படாது வடிகான்போன்று காணப்படும் அக்கரப்பத்தனை – மோர்சன் தோட்ட வீதி

## வாக்குறுதிகளை அள்ளிவீசி வாக்குவங்கியை நிரப்பிக்கொண்ட அரசியல்வாதிகள் இன்னும் கொடுத்த வாக்கை நிறைவேற்றவில்லை

### மக்கள் விசனம்

(க.கிஷாந்தன்)

அக்கரப்பத்தனை - மோர்சன் தோட்டத்திற்கு செல்லும் ஆறு கிலோமீற்றர் தூரம் கொண்ட பிரதான வீதி, 30 வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாத காரணத்தினால் வடிகான்களைப் போன்று காணப்படுவதால், அவ்வீதியூடாக செல்லும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.





மழைக்காலங்களில் குறித்த வீதியில் பயணிக்க முடியாத நிலையில், குண்டும் குழியுமாக காணப்படுவதுடன், வெள்ளம் வழிந்து செல்லும் நீரோடை போன்று காணப்படுகின்றது.

500இற்கும் மேற்பட்ட மக்கள், பாதையை பயன்படுத்தி வரும் நிலையில், 80இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் கர்ப்பிணிகள் வாகன வசதிகள் இல்லாமல் நடந்து செல்லுகின்றனர்.

வீதி புனரமைப்பு செய்யப்படாமையால், எந்தவொரு வாகனமும் இவ்வீதியில் பயணிப்பதில்லை. எனினும், மிகவும் சிரமத்துக்கு மத்தியில் முச்சக்கர வண்டிகள் அதிக பணத்தை வசூலித்துப் பயணிக்கின்றன.

வீதியை சீரமைத்துத் தருவதாகக் கூறி அரசியல்வாதிகள், வாக்குகளைப் பெற்றாலும் இன்னும் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

இதேவேளை, 10 வருடங்களுக்கு முன்பு இப்பாதையின் ஊடாக சென்ற வேன் ஒன்று, 60 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.











கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் பதவியேற்றதன் பின்னர் முதன்முறையாக பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரி, பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு விஜயம் செய்தார்.

பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டு, ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும், பூஜைகள் இடம்பெறுவதையும், தெற்காசிய ஓட்டப் போட்டியில் சாதனைப் படைத்த வை.தனுஷ்கர் என்ற மாணவருக்கு இராஜாங்க அமைச்சர் பதக்கம் அணிவித்து, சான்றுப் பத்திரத்தை வழங்குவதையும், கல்லூரியின் குறைபாடுகள் குறித்து இராஜாங்க அமைச்சருடன் கலந்துரையாடுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டுள்ள மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(பதுளை நிருபர்)

# பாவோதலில் முதலாமிடம்

(பதுளை நிருபர்)



அகில இலங்கை தமிழ்மொழித்தின மாகாண மட்ட போட்டியில் பாவோதல் பிரிவு -4 இல் பதுளை பாரதி மகா வித்தியாலயத்தின் மாணவி சி.கோகிலவேணி முதலாம் இடத்தைப் பெற்று, வித்தியாலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

வித்தியாலய அதிபர் கே.ரவிகுமார் உள்ளிட்ட ஆசிரிய குழாமினர் மாணவிக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.

# பாதுகாப்பான புலம்பெயர்தல் தொடர்பாக ஊடகர்களுக்கு விழிப்புணர்வு

(சாவகச்சேரி நிருபர்)



ஆட்கடத்தல் மற்றும் மனித விற்பனை தொடர்பான சம்பவங்களை பொறுப்புடன் செய்தி அறிக்கையிடல் குறித்து ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை நேற்று (27) யாழ்ப்பாணம் கிறீன் கிராஸ் விடுதியில் இடம்பெற்றது.

புலம்பெயர்விற்கான சர்வதேச அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட குறித்த பயிற்சிப் பட்டறை நிகழ்வில் மனித விற்பனை, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் செயற்பாடுகள், முறையான புலம்பெயர்வின் நன்மைகள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழப்பு!

(யாழ். நிருபர்)



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் மூன்று மாத காலமாக சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த கோணேஸ்வரன் ஹரிபிரணவன் (வயது 29) எனும் பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கடந்த ஜூன் மாதம் 13ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் வேலையை முடித்துக்கொண்டு வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது ஊரெழு பகுதியில் விபத்துக்குள்ளானார்.

விபத்துக்குள்ளானவர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு கடந்த மூன்று மாத காலமாக சிகிச்சை பெற்றுவந்த நிலையில், நேற்று முன்தினம் (25) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# விஜயதசமியன்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் தேவாரம் – பொழிப்பு திருப்பணி ஆரம்பம்

(யாழ். நிருபர்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் தினமும் தேவாரம் மற்றும் பொழிப்பு திருப்பணி எதிர்வரும் விஜயதசமியன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

தினமும் மாலை 5 மணிக்கு பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ‘நல்லூரில் நாளுக்கோர் தேவாரம்’ என்ற இந்த திருப்பணி முன்னெடுக்கப்படும் என்று தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் ஆஸ்தான ஓதுவார் விஸ்வபிரசன்னா சிவாச்சாரியார் தினமும் ஒரு தேவாரம் ஓதி பொழிப்பையும் வழங்குவார். தமிழாலும் இசையாலும் பக்தியை வளர்ப்பதற்கான நோக்கமாக இந்தத் திருப்பணி முன்னெடுக்கப்படுவதாக நல்லூர் தேவஸ்தானம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஓதுவார் தேவாரம் ஓதி பொழிப்பு சொல்லும்வரை ஆலயத்தில் வழிபட வருகை தந்த வெளிநாட்டவர்கள், தென்னிலங்கையைச் சேர்ந்த அனைத்து அடியார்களும் அமர்ந்திருந்து செவிசாய்க்க வேண்டும் என்ற நடைமுறையும் பின்பற்றப்படும் என்றும் தேவஸ்தானம் வலியுறுத்தியுள்ளது .

# மத்திய மாகாண சபையால் வழங்கப்பட்ட மடிக்கணினிகளை உடனடியாகக் கையளிக்குமாறு உறுப்பினர்களுக்கு அறிவிப்பு

(மாத்தளை நிருபர்)

மத்திய மாகாண சபை கலைக்கப்படுவதற்கு முன்பு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மடிக்கணினிகளை உடனடியாக மீண்டும் கையளிக்குமாறு சபையின் செயலாளர் சகல உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளார்.

மேற்படி மடிக்கணினிகள் மத்திய மாகாண சபை நடைமுறையில் இருந்தபோது உறுப்பினர்களின் நலன்கருதி 58 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.

ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஒவ்வொரு மடிக்கணினியும் மத்திய மாகாண சபையின் நிதியொதுக்கீட்டில் செலவு செய்யப்பட்ட போதும் இது முற்றிலும் பொதுமக்களுக்கான பணம் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி மேற்படி மடிக்கணினிகள் மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டபோது தமது பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் மீண்டும் அந்த மடிக்கணினிகள் மாகாண சபைக்கு திருப்பித் தரப்பட வேண்டும்.

“நாம் எந்த ஓர் ஆவணத்திலும் கையொப்பமிடவில்லை. மாகாண சபை உறுப்பினராக இருந்த எங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் என்ற அடிப்படையிலேயே வழங்கப்பட்டது. இது மீண்டும் திருப்பித்தரப்பட வேண்டுமென எங்கும் குறிப்பிடப்படவில்லை” - எனவும் ஒரு சில மாகாண சபை உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

எது எவ்வாறாயினும், பொதுமக்களின் நிதி மூலம் பெற்றுக்கொடுக்கப்பட்ட மடிக்கணினிகளை மத்திய மாகாண சபையிடம் மீண்டும் ஒப்படைப்பதே மனித நேயம் மிக்க ஒரு காரியம் எனவும் மாகாண சபை உயர் அதிகாரியொருவர் தெரிவிக்கின்றார்.

# தாயொருவரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

ஹைபொரஸ்ட் - பிரேம்லி தோட்டத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயொருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த பத்து நாட்களாக வீட்டிலிருந்து காணாமல் போயிருந்த 56 வயதுடைய கருப்பையா சரோஜா என்பவரே, ஞாயிற்றுக்கிழமை (25) மாலை சடலமாக மீட்கப்பட்டதாக ஹைபொரஸ்ட் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் காணாமல் போன விடயம் தொடர்பில், ஹைபொரஸ்ட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். இந்நிலையில் குறித்த பெண், அவரது வீட்டின் அருகிலிருந்த விவசாயக் காணியில் அமைக்கப்பட்டுள்ள ஆழமான கினற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வலப்பனை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.மோகனராஜன் சம்பவ இடத்திற்கு விரைந்து, மரண விசாரணையை மேற்கொண்டதையடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

# கழுத்துப்பட்டியால் கழுத்தை நெரித்து சிறுமியொருவரைக் கடத்த முயற்சி

## இரத்தினபுரியில் சம்பவம்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பாடசாலை விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த 12 வயதுச் சிறுமியை கடத்த முயற்சித்த சம்பவமொன்று இரத்தினபுரியில் பதிவாகியுள்ளது.

இரத்தினபுரி பாடசாலையொன்றில் கல்வி பயிலும் 12 வயதுடைய சிறுமியொருவர் நேற்று முன்தினம் பாடசாலை விட்டு வீட்டு திரும்பிக்கொண்டிருந்தபோது, அப்பகுதி புதரொன்றில் மறைந்திருந்த முகமூடி அணிந்த நபரொருவர், குறித்த சிறுமி அணிந்திருந்த கழுத்துப் பட்டியால் கழுத்தை நெரித்துள்ளார்.

அப்போது சிறுமி சத்தமிட்டுள்ளார். அந்த சத்தம் கேட்டு அருகிலுள்ள இறப்பர் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த பெண்ணொருவர் ஓடி வந்துள்ளார்.

இதனையடுத்து முகமூடி மனிதன் ஓட்டம் பிடிக்கவே சிறுமி பத்திரமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 60 லீற்றர் கசிப்புடன் நெல்லியடியில் இருவர் கைது

(யாழ். நிருபர்)



யாழ்ப்பாணம், நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 60 லீற்றர் கசிப்புடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி முள்ளிகாட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக நெல்லியடி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியை பொலிஸார் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியபோது , காட்டுப்பகுதிக்குள் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த 35 வயது மற்றும் 50 வயதுடைய இருவரை பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 60 லீற்றர் கசிப்பையும் மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மரணிப்போருக்கு இறுதி அஞ்சலி செலுத்த புதிய மண்டபம் மன்னாரில் திறந்துவைப்பு





(மன்னார் நகர் நிருபர்)



மன்னாரில் மரணிப்போருக்கு இறுதி அஞ்சலி செலுத்த மன்னார் நகர சபையினால் அமைக்கப்பட்ட புதிய அஞ்சலி மண்டபம் வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டுள்ளதாக மன்னார் நகர சபை உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ் தெரிவித்தார்.

மன்னார் நகரசபையின் 6.90 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அஞ்சலி செலுத்துவதற்காக பொது மண்டபம் மன்னார் பொது சேமக்காலை பகுதியில் அமைக்கப்பட்ட நிலையில், கடந்த சனிக்கிழமை (24) திறந்துவைக்கப்பட்டுள்ளது. மரணித்தவர்களை வீட்டில் வைத்து இறுதி நிகழ்வுகள் செய்ய வசதியற்றவர்கள் இதனை பயன்படுத்திக்கொள்ளும் வகையில் அஞ்சலி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதன் முதலாக சபையின் நிதியூடாக மயானத்தில் அமைக்கப்பட்ட மண்டபமாக இது அமைகிறது.

இதனை நகர சபையின் அனுமதியுடன் யாரும் பயன்படுத்த முடியும். மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் மன்னார் நகர சபையின் உறுப்பினர்கள், செயலாளர், சபை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் மக்கள் பாவனைக்கு திறந்துவைக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

# 73ஆவது இராணுவ நிறைவாண்டை முன்னிட்டு மஹா போதியில் விசேட பூஜை



இராணுவத்தின் 73 ஆவது ஆண்டு (ஒக்டோபர் 10) நிறைவு மற்றும் இராணுவ தினத்தை முன்னிட்டு புனித அநுராதபுரம் ஜெயசிறி மஹா போதி வளாகத்தில் இராணுவ கொடிக்கு ஆசீர்வாதம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் படைப்பிரிவுகளிலும் இருந்து நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்கள் கலந்து கொண்டனர். இந்த பௌத்த மத நிகழ்வுகளின் பிரதம அதிதியாக இராணுவத் தளபதி லெப்டினன்



ஜெனரல் விக்கும் லியனகே கலந்துகொண்டார்.

# இலங்கையில் மீண்டும் முதலீடு செய்வதில் சிங்கப்பூர் ஆர்வம்

## ஜனாதிபதி ரணிலுடனான சந்திப்பின்போது அந்நாட்டு பிரதமர் லூங் தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங்கை டோக்கியோவில் சந்தித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தின்கீழ் சர்வதேச வர்த்தக அலுவலகமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பது தொடர்பில் இந்த சந்திப்பின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிங்கப்பூர் பிரதமரிடம் விளக்கமளித்தார்.

சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முன்னுரிமை வழங்குவதாகவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார். இதனை வரவேற்ற பிரதமர் லீ சியென் லூங், இலங்கையில் முதலீடு செய்ய சிங்கப்பூர் மீண்டும் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்தார்.

அடுத்த வருடம் இலங்கை 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாட இருக்கும் நிலையில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு சிங்கப்பூர் பிரதமருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

## கருத்து கந்தசாமி

*சிகரெட் ஒன்றை பற்றவைத்து அந்த புகையை வெளியே விட்டு இரசித்த பாடசாலை சிறுமி ஒருவரின் வீடியோ ஒன்று கடந்த சில நாட்களாக சமூக ஊடகங்களில் உலாவின.*

*அந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் விசாரணை நடக்கப்போவதாக செய்தியொன்றை பார்த்தேன். இளவயது துடிப்பில் அந்த மாணவி செய்த தவறை நியாயப்படுத்துவது எனது நோக்கமல்ல. அதனை ஆராயத்தான் வேண்டும்.*

*ஆனால், சில நாட்களுக்கு முன்னர் பாடசாலை மாணவி ஒருவர் தேங்காய் கொப்பராவை பாடசாலை மதிய உணவாக கொண்டு சென்றதாக செய்திகள் வெளிவந்தனவே? அதைப்பற்றி யாராவது தேடினார்களா அல்லது அப்படியான எத்தனை பேர் ஒருவேளை உணவுக்கே கஷ்டப்படுகிறார்கள் என்பது பற்றியாவது ஆராயப்பட்டதா?*

*இந்த நாட்டில் சுதந்திரத்திற்குப் பின்னர் எது நடக்கவேண்டுமோ அது நடக்காது. எது நடக்கக்கூடாதோ அது நடக்கும். அதுதான் விதிபோலும்..*



# இலங்கைக்கு விஜயம் செய்து முதலீட்டு வசதிகள் குறித்து நேரடியாக தகவல்களை பெற்றுக்கொள்க!

## பிரேஸில் தூதுக்குழுவினருக்கு சுமித் தசநாயக்க அழைப்பு



பிரேஸிலுக்கான இலங்கைத் தூதுவர் சுமித் தசநாயக்க அண்மையில் பிரேஸிலிலுள்ள முன்னணி பொருளாதார மையங்களுடன் இலங்கையின் வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கான தூதரகத்தின் அணுகல் திட்டத்தின் ஒரு பகுதியாக கோயாஸ் மாநிலத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

இந்த விஜயத்தின்போது தூதுவருடன் தூதரகத்தின் அமைச்சர், ஆலோசகர் (வணிகம்) சீவலி விஜேவந்தவும் உடனிருந்தார்.

இதன்போது தூதுவர் தசநாயக்க, கோயாஸ் மாநிலத்தில் கைத்தொழில் துறையுடன் குறிப்பாக, மருந்து, தகவல் தொழில்நுட்ப சேவைகள், சுற்றுலா மற்றும் இறப்பர் சார்ந்த தொழில்களில் இலங்கையின் ஆர்வத்தை எடுத்துரைத்தார். பிரேஸிலிய முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் குறிப்பாக, கொழும்பு துறைமுக நகரம் மற்றும் ஹம்பாந்தோட்டையிலுள்ள கைத்தொழில் வலயத்தில் முதலீட்டு வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்தார்.

கோயாஸ் வர்த்தகம், கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் சங்கம், இலங்கைக்கும் கோயாஸ் மாநிலத்திற்கும் இடையில் கட்டமைக்கப்பட்ட முறையில் வர்த்தக நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு இலங்கையிலுள்ள முன்னணி வர்த்தக சம்மேளனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டது. அதன்படி, 2022ஆம் ஆண்டு இறுதிக்குள் முன்மொழியப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இறுதிசெய்ய இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். சர்வதேச வர்த்தகத்திற்கான இயக்குநர்கள் ஜோஸ் ப்ரெனோ, கோயாஸின் வர்த்தகம், தொழில்கள் மற்றும் சேவைகள் சங்கத்தின் அகிரா நினோமியா ஆகியோரும் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

அனாபோலிஸ், கோயாஸ் மாநிலத்திலுள்ள தொழில்துறை கூட்டமைப்பின் பிராந்திய அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டம், பிரேஸிலின் மருந்துத் தேவைகளில் 40 சதவீத அனாபோலிஸ் நகரில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதனடிப்படையில், இலங்கையின் மருந்துத் துறையில் பிரேஸிலிய நிறுவனங்கள் முதலீடு செய்யும் சாத்தியத்தை மையமாகக்கொண்டது.

மருந்துத் துறையில் வெளிநாட்டு முதலீட்டு வாய்ப்புகள் இருப்பதைத் தூதுவர் எடுத்துரைத்ததுடன், பிரேஸிலிய மருந்து நிறுவனங்கள் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை ஆராயலாம் என சங்கத்தின் அனாபோலிஸ் பிராந்தியத்தின் தலைவர் வில்சன் டி ஓலிவேரா தெரிவித்தார்.

இதன்படி, இலங்கைக்கு விஜயம் செய்து பிரேஸில் நிறுவனங்களுக்கு உள்ள வசதிகள் குறித்து நேரடியாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள தூதுக்குழுவினருக்கு தூதுவர் அழைப்பு விடுத்தார். வெளிநாட்டு வர்த்தக சபையின் தலைவர் வில்லியம் லீசர் ஓட்வயர் மற்றும் கோயாஸ் மார்சல் மாநிலத்தின் சிண்டிகேட் ணப் பார்மாசூட்டிகல் இண்டஸ்ட்ரீஸின் நிறைவேற்றுத் தலைவர் ஹென்ரிக் சோரெஸ் ஆகியோரும் கூட்டத்தில் இணைந்தனர்.

கோயாஸ் மாநிலத்தின் சுற்றுலா நடத்துநர்கள், சங்கத்தின் தலைவரான எலினா மீரெல்ஸ் உடன் இலங்கை அணி சந்திப்பொன்றையும் நடத்தியது. நவம்பர் 2022இல் சுற்றுலா நடத்துநர்களுடன் இலக்கு விழிப்புணர்வு ஊக்குவிப்பு நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கான உதவியை சங்கத்தின் தலைவர் உறுதியளித்தார்.



**உடப்பு கிராமத்தில் ஒருசில கரைவலைத் தொழிலாளர்கள் மட்டும் தமது தொழிலை ஆரம்பித்துள்ளனர். இதன்போது பிடிக்கப்பட்ட மீன்கள், மீன் வாடியில் தரம் பிரிக்கப்படுவதை படங்களில் காணலாம். மிகுதியாகவுள்ள வள்ளங்கள் நாளை (29) கடற்றொழிலை ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் - உடப்பு செய்தியாளர்)**

# காட்டு யானை தாக்கி இருவர் உயிரிழப்பு

எப்பாவல பிரதேசத்தில் காட்டு யானை தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எப்பாவல, கெலேகம மற்றும் ரொட்டவெவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவரே இவ்வாறு காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் 58 மற்றும் 64 வயதான இருவரே பலியாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# நொச்சியாகமவில் இலஞ்சம் பெற்ற கிராம உத்தியோகத்தர் கைது

**(அநுராதபுரம் செய்தியாளர்)**

அனுமதிப்பத்திரமின்றி மரங்களைத் தறிப்பதற்காக நபர் ஒருவரிடம் பத்தாயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாக பெற்றுக்கொண்ட கிராம உத்தியோகத்தர் ஒருவரை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் நொச்சியாகம பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர். இரகசிய தகவலொன்றுக்கமைய நேற்றுமுன் தினம் நொச்சியாகம நகரில் வைத்து இலஞ்சமாக பணம் பெற்றுக்கொண்ட கிராம உத்தியோகத்தரை ஆணைக்குழு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 333 குசும்புர கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடமை செய்துவந்த கிராம உத்தியோகத்தரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரான கிராம உத்தியோகத்தர் நொச்சியாகம நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# பாவனைக்கு உதவாத ஒருதொகை சீனி கைப்பற்றல்

## சந்தேகநபர்கள் இருவர் கைது

பொதுமக்களின் பாவனைக்கு உதவாத சீனித் தொகையுடன் சந்தேகநபர்கள் இருவர் பேலியகொட பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கோனஹேன முகாம் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது நுகர்வுக்குப் பொருந்தாத 3 ஆயிரம் கிலோ கிராம் சீனித் தொகையை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த களஞ்சியத்திலிருந்த 41 மற்றும் 48 வயதுடைய நபர்கள் இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், கைப்பற்றப்பட்ட சீனித்தொகையுடன் சந்தேகநபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக பேலியகொடை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் காரியாலயத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# தம்புத்தேகம வர்த்தகரின் பணத்தை கொள்ளையடிக்க முயற்சித்த சம்பவம்

## ராஜாங்கனை பிரதேச சபை உறுப்பினர் கைது

தம்புத்தேகம பிரதேசத்திலுள்ள தனியார் வங்கிக் கிளையொன்றுக்கு முன்னால் நேற்று முன்தினம் (26) வர்த்தகரொருவரிடமிருந்து 2 இலட்சத்து 23 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் செல்ல முயற்சித்த சம்பவம் தொடர்பில் ராஜாங்கனை பிரதேச சபையின் பொதுஜன பெரமுன உறுப்பினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு சந்தேகநபர்கள் இருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய, விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டு இவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்று முன்தினம் (26) பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றிருந்ததுடன், இந்தச் சம்பவத்தின்போது குறித்த பிரதேசத்தில் கடமையிலிருந்த தம்புத்தேகம பொலிஸ் நிலையப் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர், கொள்ளையர்களை தடுத்து அவர்களை கைதுசெய்யவும் நடவடிக்கை எடுத்திருந்தார்.





**நவராத்திரி விரதம் நேற்று முன்தினம் (26) ஆரம்பமான நிலையில், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திலும் நேற்று முன்தினம் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.**

# மே 09 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலான விசேட குழுவின் அறிக்கை விரைவில் சபைக்கு

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார அறிவிப்பு





நாட்டில் கடந்த மே 09ஆம் திகதி மற்றும் அதனை அண்மித்த தினங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான விசேட குழுவின் அறிக்கை கடந்த 08ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகவும், அதற்கமைய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்துக்குத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

புதிய கூட்டத்தொடருக்கான பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டத்துக்குத் தலைமை தாங்கியபோதே இராஜாங்க அமைச்சர் அண்மையில் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒவ் த ஃபிளீட் வசந்த கருண்ணாகொட, முன்னாள் விமானப்படைத் தளபதி மார்ஷல் ஒவ்த எயார்போர்ஸ் ரொஷான் குணதிலக்க மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்னாயக்க (ஓய்வுபெற்ற) ஆகியோரை உள்ளடக்கிய குழு இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்திருப்பதாகவும், பாதுகாப்புத் துறையில் ஏதாவது குறைபாடுகள் ஏற்பட்டிருந்தால் எதிர்காலத்தில் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

மே 09ஆம் திகதி மற்றும் அதனை அண்மித்த தினங்களில் இந்நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பில் குறைபாடுகள் ஏதும் ஏற்பட்டிருந்ததா என்றும், இவற்றுடன் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக எடுத்துள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை என்பது தொடர்பிலும் உறுப்பினர்கள் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன இங்கு தெரிவித்தார்.

அத்துடன், இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள மீள ஒப்படைத்தல் ஒப்பந்தம் தொடர்பான கட்டளை நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கும் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

2014ஆம் ஆண்டு இரு நாட்டுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைய ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து குற்றவாளிகள் உள்ளிட்ட கைதுசெய்யப்பட வேண்டிய நபர்களை இந்நாட்டுக்குள் விரைவில் அழைத்துவரும்போது ஏற்படுகின்ற சட்ட ரீதியான தடைகளை நீக்குவது இதன் நோக்கமாகும்.

வெளிநாடுகளிலிருந்து இந்நாட்டுக்கு கடத்தப்படும் போதைப்பொருள் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுத்தல், பொய்யான பிரசாரங்களுக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு விடயங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

குழுவின் உறுப்பினர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரத் வீரசேகர, பிரதீப் உதுகொட உள்ளிட்டோரும் அரசாங்க அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# சட்டவிரோதமாக ஆற்றுமண் ஏற்றிவந்தவருக்கு அபராதம்

(கோணாவத்தை, திராய்க்கேணி நிருபர்கள்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளக்காட்டு பிரதேசத்தில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி ஆற்றுமண் ஏற்றிவந்த உழவு இயந்திர உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் 10,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி ஆற்றுமண் ஏற்றிவந்த வாகனத்தை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றப்பட்டிருந்த உழவு இயந்திர வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (26) ஆஜர்படுத்தியபோது மேற்படி தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

வாகன உரிமையாளரினால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு வாகனமும் விடுவிக்கப்பட்டது.



சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக்கொண்ட அல்ஹாஜ் மௌலவி அச்சித்தம்பி முஹம்மது சிராஜுதீன் கடந்த வியாழக்கிழமை, சம்மாந்துறை புளக் ஜே பிரிவிற்கு முஸ்லிம் விவாகப் பதிவாளராக நியமனம் பெற்றுக்கொண்டார். இதற்கான கடிதத்தை மேலதிக அராசங்க அதிபர் வீ. ஜெகதீசன் வழங்கினார். (ஏ.அகீல் சிஹாப்)

# மட்டு. வாவியின் அழகை மேம்படுத்த மாநகர சபையால் புதிய வேலைத்திட்டம்







(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு வாவியின் அழகை மேம்படுத்தும் நோக்கோடு, சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு மாநகர மற்றும் பிரதேச ஆற்றின் படுக்கைகள், பொதுமக்கள் கூடுமிடங்கள் மற்றும் வீதிகளில் வீசப்பட்டிருக்கின்ற கழிவுகளை அகற்றும் பணிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (25) முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 சீ2, லியோ கழகம், வின்சன்ட் ரைட்டஸ் மற்றும் சிசிலியா பாடசாலைகளின் லியோ கழகங்கள் என்பன மட்டக்களப்பு மாநகர சபையுடன் இணைந்து இப்பணிகளை மேற்கொண்டிருந்தன.

மட்டக்களப்பு லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் ரி.குணராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாநகர சபை எல்லைக்குட்பட்ட புதுப்பாலத்திலிருந்து ஊறணிச் சந்திவரையிலான ஆற்றங்கரைகளில் வீதிகளில் பயணிப்போரால் வீசப்பட்டிருந்த கழிவுகள் சேகரிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன், லயன்ஸ் கழகத்தின் திட்ட இணைப்பாளர் ஏ.செல்வேந்திரன், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், மாநகர சபை சுகாதாரக் குழுத் தலைவரும், மாநகர சபை உறுப்பினருமான க.ரகுநாதன், மாநகர சபை உறுப்பினரும், ஊடகவியலாளருமான சிவம் பாக்கியநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

சுற்றாடல் அதிகாரசபையின் ஆலோசனைக் கிணங்க சுற்றாடல் வாரமானது கடந்த சனிக்கிழமை (17) முதல் 25ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# காதி நீதிபதிகளை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கிடப்பிலுள்ளதாக தௌபீக் எம்.பி. சுட்டிக்காட்டு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கிற்கும், நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (26) அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது கடந்த சில மாதங்களுக்கு முன்பு காதி நீதிபதிகளை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, இற்றைவரை அதற்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருப்பதாகவும் இவை தொடர்பாக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

காதி நீதிவான் இன்மையால் பொதுமக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அதனை நிவர்த்திசெய்து நேர்முகப் பரீட்சையை நடத்தி தகுதியானவர்களை உடனடியாக அந்தந்தப் பிரதேசங்களுக்கு நியமிக்குமாறு நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவை கேட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.



இதன்போது அமைச்சர் நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு பேசி, தாம் நடவடிக்கை எடுப்பதாக கூறியதாகவும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

# அக்கரைப்பற்று அஹ்லுஸ்ஸுன்னா ஜும்ஆ பள்ளிவாசலில் இரத்ததானம்






(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கிக்கு அன்பளிப்புச் செய்யும் நோக்கில் "உதிரம் கொடுத்து உயிர் காக்க உதவுவோம்" எனும் தொனிப்பொருளில் அக்கரைப்பற்று இஸ்லாமிய கலாசார வழிகாட்டல் மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் இரத்ததான முகாம் அக்கரைப்பற்று அஹ்லுஸ்ஸுன்னா ஜும்ஆ பள்ளிவாசலில் அண்மையில் (24) நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை, வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி அஸாத் எம்.ஹனிபாவின் வேண்டுகோளுக்கிணங்க, இரத்தப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு மேற்படி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்முகாமில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், பள்ளிவாயலின் மதகுருமார்கள், நிருவாகிகள் ஆகியோர் ஒத்துழைப்பு நல்கியதுடன், இதில் ஆண்கள், பெண்கள் என பெரும்பாலான இரத்தக் கொடையாளர்கள் ஆர்வத்தோடு கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கியதுடன், இதில் 157 இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



**இலங்கையில் இராவணனும் இல்லை, சிவ வழிபாடும் இல்லையாம். சிங்கள தேசமாம் எண்டு இனவாதி அமைச்சர் சரத் வீரசேகரா சொல்லி இருக்காரு எலுவா?**

**அத கேட்டு மானம், ரோசம் கெட்ட டக்ளஸ், புள்ளையான், விசாலேந்திரன், அங்கயன், எல்லாம் மசிர்புடுங்கவா தமிழ்மக்கள் வாக்களித்தனர்!**

**எல்லாம் ரீஎன்ஏ புடுங்கோணும் எண்டா நீங்க ஏண்டா தம்பிகள் நாடாளுமன்றத்தில் ரோசம் கெட்டு இத கேட்டுத்து இருக்கியள்! எருமைகளே ..!**

# 'இதயத்தால் பேசுகின்றேன்' கவிதை நூல் வெளியீடு

(கந்தளாய் நிருபர்)

மூதூர் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் தலைமையில் மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (26) பி.ப. 3.30 மணிக்கு 'இதயத்தால் பேசுகிறேன்' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தரான ஜனாபா கப்சா ரிஸ்வான் எழுதிய 'இதயத்தால் பேசுகிறேன்' எனும் கவிதை நூலுக்கான வெளியீட்டு உரையை பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் பி.அரபாத் நிகழ்த்தியதோடு, நூலுக்கான அணிந்துரையை ஓய்வுபெற்ற அதிபரும் பிரபல கவிஞருமாகிய மீரான் முகைதீன் நிகழ்த்தினார்.

அதுபோல் சிறப்புரையை பிரதேச செயலாளர்கள் நிகழ்த்த, ஏற்புரையை நூலாசிரியர் கப்ஷா றிஸ்வான் செய்தார்.

பிரதேச செயலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், கிராம நிர்வாக உத்தியோகத்தர் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்துகொண்டு நூற்பிரதிகளைப் பெற்று ஆசிரியையை ஊக்கப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று சின்னக்குளம் வீரமாகாளியம்மன் ஆலயத் திருவிழா





(ஆலையடிவேம்பு நிருபர்)

அக்கரைப்பற்று சின்னக்குளம் ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருச்சடங்கு திருவிழா நேற்று முன்தினம் (26) திருக்கதவு திறக்கும் வைபவத்துடன் ஆரம்பமானது.

அதிகாலை அம்மனுக்கான விசேட பூஜைகள் இடம்பெற்றதுடன், அம்மனின் திருக்கதவு பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் திறக்கப்பட்டது.

கணபதி ஹோமம் மற்றும் திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமான திருச்சடங்கானது 30ஆம் திகதி அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பாற்குட பவனியும் இடம்பெறும்.

01ஆம், 02ஆம் திகதிகளில் அம்மனின் உள்வீதி உலா வருதலுடனும் 03ஆம் திகதி காவடி ஆட்டங்களுடன் வெளிவீதி மற்றும் கிராம சுற்றுலா இடம்பெறும். 04ஆம் திகதி சக்தி மகா யாகம் நோர்ப்பு நெல் நேர்தல் ஆகிய கிரியைகளுடனும் 05ஆம் திகதி அதிகாலை பக்தி ததும்பும் தீமிதிப்பும் இடம்பெறும். 12ஆம் திகதி எட்டாம் சடங்குடன் திருவிழா நிறைவுறும்.

ஆலய தலைவர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற திருக்கதவு திறக்கும் நிகழ்வினையும் வருடாந்த அலங்காரத் திருச்சடங்கினையும் ஆலய வழிபாட்டு பிரதான கிரியைகள் யாவற்றையும் ஆலய பிரதமகுரு க.சிவராசா, உற்சவகால குரு சிவத்திரு இ.யோகானந்தம் உள்ளிட்ட பிரதம குருமார்களாலும் சிவத்திரு சோ.கஜேந்திரன், சிவத்திரு யோ.மோகன்ராஜ், சிவத்திரு ஜெ.ஜெயரூபன், சிவத்திரு வி.நிசாந் உள்ளிட்ட உதவி பூசகர்களாலும் நடத்திவைக்கப்படவுள்ளதுடன், வாத்ம சாந்தி, கிராம சாந்தி, சக்தி பூஜை ஆகியன சிவஸ்ரீ சீ.கு.கௌரிசங்கர் குருக்களால் நடத்தி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேராசிரியர் பாலசுகுமாரின் நூல் அறிமுக விழா









(திகாமடுல்ல நிருபர்)

மூதூர், சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் பாலசுகுமாரின் ஒன்பது நூல்களின் அறிமுக விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (25) திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நூல் அறிமுக விழாவுக்கு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மூ.கோபாலரத்தினம் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார்.



இதன்போது சேனையூர் கலம்பகம், கரைகள் கடந்து, Eezha Natiyam, Inniyam & Music & Dance of Eazham Tamilians, கறுப்பி, கொடி எழு அன்னப்புரவி, தமிழ் மரபில் சிவாஜி கணேசனின் நடிப்பு ஈழ நாட்டியம், ஓ தோழனே நந்தினி, நஞ்சுமிழும் காளான்கள் என்ற இந்த 9 நூல்களின் அறிமுகம் இடம்பெற்றது.

இந்த நூல்களின் அறிமுக உரைளை ஓய்வுபெற்ற அதிபரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான திருமலை நவம், கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற மாகாணப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி, திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் சி.ஸ்ரீதரன், எழுத்தாளர் கதிர் திருச்செல்வம், எழுத்தாளர் கு.யோகானந்தம், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் க.அன்பழகன், ஆசிரியர் தி.பவித்திரன், எழுத்தாளர் கொட்டியாரன் சிவசங்கரன் ஆகியோரினால் நிகழ்த்தி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டம்;

## ஈரான் இளம்பெண் சுட்டுக் கொலை




ஈரானில் ஹிஜாப்பிற்கு எதிராக போராட்டம் நடத்திய இளம் பெண்ணொருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஈரானில் ஹிஜாப் அணிவதை கண்காணிக்க, பொலிஸ் தனிப்படை உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஹிஜாப்பை முறைப்படி அணியவில்லை என்று கூறி பொலிஸார் தாக்கியதில் மஹ்ஷா அமினி என்ற 22 வயதுடைய இளம்பெண் உயிரிழந்த சம்பவத்தை கண்டித்து ஈரான் முழுவதும் பெண்கள் தீவிர போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஹிஜாப்பை கழற்றி வீசியும், தீ வைத்து எரித்தும், முடியை வெட்டியும் பெண்கள் அரசுக்கு எதிராக முழக்கமிட்டு வருகின்றனர். ஹிஜாப் எதிர்ப்பு போராட்டக்காரர்களை ஒடுக்க ஈரான் அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. கடந்த 10 நாட்களில் மட்டும் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடத்திய தொடர் தாக்குதல்களில் இதுவரை 75 பேர் உயிரிழந்துள்ளனர். 1500இற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ஈரானின் கராச் நகரில் போராட்டத்தில் பங்கேற்ற ஹதிஷ் நஜாஃபி என்ற 20 வயது இளம்பெண்ணை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

**உயிர்குடித்த 6 தோட்டாக்கள்**

வயிறு, கழுத்து, மார்பு உள்ளிட்ட இடங்களில் 6 குண்டுகள் பாய்ந்ததில் நஜாஃபி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார். அவரது இறுதிச் சடங்கு தொடர்பாக வெளியாகியிருக்கும் காணொளி, போராட்டக்காரர்களை மேலும் ஆத்திரமடைய செய்துள்ளது. ஈரானில் நடைபெற்று வரும் ஹிஜாப்பிற்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவாக ஐரோப்பிய நாடுகளிலும் மக்கள் போராட்டத்தில் குதித்திருக்கும் நிலையில், போராட்டத்தில் வெளிநாட்டு சதி இருப்பதாக ஈரான் குற்றஞ்சாட்டி வருகிறது.

**லண்டனில் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டம்**

ஈரான், கனடா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டம் வலுபெற்றுள்ள நிலையில், லண்டனில் ஈரான் தூதரகத்தை போராட்டக்காரர்கள் முற்றுகையிட முயன்றனர். அருகிலுள்ள பிரித்தானிய இஸ்லாமிய மையத்தையும் தாக்க முயன்றனர். பொலிஸார் மீது போத்தல்களை வீசி தாக்கியுள்ளனர். இதையடுத்து பொலிஸார் 12 பேரை கைதுசெய்தனர். இந்த மோதலில் பொலிஸார் ஐவருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**ஜேர்மனி கண்டனம்**

ஹிஜாப் போராட்டங்களை ஒடுக்க பொலிஸார் வன்முறையில் ஈடுபடுவது குறித்து தங்கள் நாட்டுக்கான ஈரான் தூதர் மஹ்மூத் ஃபராசாண்டேவை நேரில் அழைத்து ஜேர்மனி வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்தது.

அமைதியான போராட்டங்களை அனுமதிக்குமாறும் இனியும் போராட்டக்காரர்கள் மீது வன்முறையைப் பிரயோகிக்க வேண்டாம் எனவும் மஹ்மூதிடம் வலியுறுத்தியதாக அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### பாதுகாப்பு வலயத்துள் டோக்கியோ

# மறைந்த முன்னாள் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேவுக்கு நினைவேந்தல்




மறைந்த ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவுக்கு நேற்று (27) ஜப்பான் அரசு சார்பில் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

டோக்கியோவின் மையப் பகுதியிலுள்ள புடோகன் என்ற இடத்தில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட 50 நாடுகளின் தலைவர்கள் மற்றும் 700இற்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உட்பட 4,300இற்கும் மேற்பட்ட விருந்தினர்கள் கலந்துகொண்டிருந்தனர். இதனால் டோக்கியோவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நினைவேந்தல் மண்டபத்துக்கு வெளியே மறைந்த பிரதமர் அபேவுக்கு மக்கள் நீண்ட வரிசைகளில் நின்று அஞ்சலி செலுத்தினர்.





ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்ஷோ அபே, கடந்த ஜூலை 8ஆம் திகதி நரா நகரில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டார். ஜப்பானில் நீண்ட காலம் பிரதமராக இருந்து, சர்வதேச அளவில் நன்மதிப்பைப் பெற்றவரான அவரது திடீர் மறைவு, பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதனையடுத்து பாரம்பரிய மரியாதைகளுடன் இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டு அபேவின் உடல் கடந்த ஜூலை 12 ஆம் திகதி தகனம் செய்யப்பட்டது.

இந்நிலையில், அபேவின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில், ஜப்பான் அரசு சார்பில் டோக்கியோவில் நேற்று நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கலந்துகொள்ள ஜப்பான் அரசு விடுத்த வேண்டுகோளையேற்று உலக நாடுகளின் தலைவர்கள் டோக்கியோவில் முகாமிட்டிருந்தனர்.

இதன்போது அபேயின் அஸ்தி அடங்கிய பெட்டகத்தை அபேயின் மனைவி அகி அபே (Akie Abe) நினைவேந்தல் மண்டபத்துக்கு எடுத்து வந்து அஞ்சலிக்காக வைத்தார். 19 பீரங்கி குண்டுகள் முழங்க ஷின்சோ அபேவுக்கு மரியாதை செலுத்தப்பட்டது. கறுப்பு உடை அணிந்து வந்து ஜப்பான் அரச குடும்பத்தினர் மறைந்த ஷின்சோ அபேவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நினைவேந்தல் நிகழ்ச்சியில் ஜப்பான் பிரதமர் ஃப்யூமியோ கிஷிடா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, சிங்கப்பூர் பிரதமர் லி சீன் லூங், அவுஸ்திரேலிய பிரதமர் அந்தேரி அல்பனிஸ், வியட்நாம் ஜனாதிபதி கூயென் ஜூவான் புக், தென்கொரிய பிரதமர் ஹான் டக் சூ, பிலிப்பைன்ஸ் துணை ஜனாதிபதி சாரா டடெர்டீ, இந்தோனேஷிய துணை ஜனாதிபதி மருஃப் அமின், ஐரோப்பிய ஒன்றிய தலைவர் சார்லஸ் மிச்செல் உட்பட 50 நாடுகளின் தலைவர்கள் மற்றும் 700இற்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உட்பட 4,300இற்கும் மேற்பட்ட விருந்தினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

பிரதமர் மோடியை போலவே, அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ், அமெரிக்கத் துணை அதிபர் கமலா ஹாரீஸ் உள்ளிட்டோரும் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். சர்வதேச தலைவர்களின் வருகையையடுத்து டோக்கியோவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.



# வீட்டுச்சிறையில் சீன ஜனாதிபதி? வதந்திகளால் தொடரும் பதற்றம்

### முற்றுப்புள்ளி வைக்காமல் வெளியுறவு – உள்துறை அமைதி காப்பது ஏன்?



உலக செய்திகள்

சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பல்வேறு வதந்திகள் பரவிவரும் நிலையில், வெளியுறவுத்துறை மற்றும் உள்துறை அமைச்சகத்திடம் இருந்து ஏன் அதிகாரப்பூர்வ தகவல் வரவில்லை என சர்வதேச அவதானிகள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், இராணுவத்திற்கும் இடையே விரிசல் இருப்பதாகவும் சீனர்கள் தெரிவித்து வருகின்றனர்.

9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உள்நாட்டு விமான சேவைகள் சமீபத்தில் இரத்து செய்யப்பட்டிருப்பதால் ஆட்சிக் கவிழ்ப்பு கிட்டத்தட்ட உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் சீனாவை சேர்ந்த சமூக ஊடக பயனாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சீனாவுக்கு இரும்புக் கோட்டை என்ற மற்றொரு பெயரும் உண்டு. அங்கிருந்து எந்த தகவலும் அவ்வளவு எளிதாக வெளியில் கசிந்து விடாது. கம்யூனிஸ்ட் ஆட்சி நடக்கும் சீனாவின் ஆட்சி அதிகாரத்தில் இராணுவத்துக்கு பெரும் பங்குள்ளது. சீனாவின் ஜனாதிபதியாக இருப்பவரே, கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலராகவும், இராணுவத்தின் தலைவராகவும் பதவி வகிப்பார். ஜிங்பிங் 2012இலிருந்து இந்தப் பதவியிலுள்ளார். ஏற்கனவே இரண்டு முறை சீன ஜனாதிபதி பதவியை வகித்து விட்ட நிலையில், மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாவதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வந்தார்.

இந்நிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக எந்த வெளிநாடுகளுக்கும் செல்லாத ஜிங்பிங், சமீபத்தில் உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற ஷங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்கச் சென்றார். ஆனால், கூட்டத்தில் முழுமையாக கலந்துகொள்ளாமல், கடந்த 16ஆம் திகதி அவசரமாக பீஜிங் திரும்பினர். அப்போது அவர் அதிரடியாக கைதுசெய்யப்பட்டு, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள ஜோங்னான்ஹை மாளிகையில், வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது பீஜிங் நகர் முழுதும் இராணுவத்தின் முற்றுகையில் இருப்பதாகவும், இராணுவ வாகனங்கள் பல கி.மீ., தூரம் வரிசை கட்டி நிற்பதாகவும் சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த தகவல், சீனர்களால் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருவதால், சர்வதேச அரசியல் அரங்கில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. உறுதி செய்யப்படாத இந்த தகவல் குறித்து, சீனாவிலிருந்து எந்த ஒரு அதிகாரபூர்வமான தகவலும் வெளியிடப்படவில்லை.

**அடுத்த அதிபர் யார்?**

சீன இராணுவத்தின் தளபதி லி கியோமிங் (வயது 61), அந்த நாட்டின் அடுத்த ஜனாதிபதியாவதற்கான வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. 1976இல் இராணுவத்தில் இணைந்த கியோமிங், 2013இல் தளபதி அந்தஸ்துக்கு உயர்ந்தார். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் உள்ளார். சமீபத்தில் நடந்த ஜிங்பிங் அதிருப்தியாளர்களின் கூட்டத்தில் இவர் பங்கேற்றார். இதனால், சீனாவின் அடுத்த ஜனாதிபதியாக இவர் பதவியேற்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

**60 சதவீத விமானங்கள் இரத்து**

அமெரிக்காவில் வசிக்கும் சில சீனர்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ள பதிவில், தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழலை அடுத்து, நாடு முழுவதும் கடந்த 21ஆம் திகதி மட்டும், 9,581 விமானங்கள், அதாவது 60 சதவீத விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். குறிப்பாக பீஜிங்கில் மட்டும், 600இற்கும் அதிகமான உள்நாட்டு, வெளிநாட்டு விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

**அண்டை நாடுகளுடன் மோதல்**

தாய்வான், இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளுடன் தொடர்ந்து மோதல் போக்கை ஜிங்பிங் பின்பற்றி வந்ததை, அங்குள்ள கம்யூனிஸ்ட் தலைவர்கள் விரும்பவில்லை. தாய்வான் நீரிணையில் சீனப் போர் விமானங்கள் மற்றும் கப்பல்களை அனுப்பி வைத்து போர்ப் பயிற்சியில் ஈடுபட வைத்ததால், சீனா மீது உலக நாடுகள் அதிருப்தியடைந்தன.

இது, அங்குள்ள கம்யூனிஸ்ட் தலைவர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும், இந்தியாவின் அருணாச்சல பிரதேசம், லடாக் ஆகிய பகுதிகளில் அடிக்கடி சீன இராணுவம் அத்துமீறியது. இதனால், இந்தியாவுடனான சீனாவின் உறவு பாதிக்கப்பட்டது. இதுவும், சீன மக்களிடமும், சீன கம்யூனிஸ்ட் கட்சியினரிடமும் ஜிங்பிங் மீது அதிருப்தியை ஏற்படுத்தியது.

**உண்மையா, பொய்யா?**

சீன அதிபர் ஜிங்பிங் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக தகவல் பரவுகிறது. இந்த புதிய வதந்தி சரிபார்க்கப்பட வேண்டும். ஜிங்பிங் உஸ்பெகிஸ்தானில் இருந்தபோது சீன கம்யூனிஸ்ட் தலைவர்கள், கட்சி பொறுப்பு மற்றும் இராணுவ பொறுப்பிலிருந்து அவரை நீக்கியதாக கருதப்படுகிறது.

**பீஜிங் முற்றுகை?**

சீனாவைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலரும், தற்போது அமெரிக்காவில் வசிப்பவருமான ஜெனிபர் ஜெங், சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில்,

தலைநகர் பீஜிங் இராணுவத்தின் முற்றுகையில் உள்ளது. சீனாவின் மற்ற நகரங்களிலிருந்து பீஜிங்கிற்கு ஆயிரக்கணக்கான இராணுவ வாகனங்கள் வருகின்றன. 80 கி.மீ. தூரத்துக்கு இராணுவ வாகனங்கள் வரிசை கட்டி நிற்பதால், அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது. இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

**மோப்பம் பிடித்த ரஷ்ய உளவுத்துறை**

சீனாவில் நடக்கும் அரசியல் குழப்பங்களை ரஷ்ய உளவுத்துறை மோப்பம் பிடித்துள்ளது. இதையடுத்து, ரஷ்யாவைச் சேர்ந்த எரிவாயு நிறுவனமான, காஸ்ப்ரோன் சீனாவுக்கு குழாய் வழியாக செல்லும் எரிவாயு விநியோகத்தை நிறுத்தி வைத்தது. ஆனாலும், பராமரிப்புப் பணி காரணமாக எரிவாயு விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

திருமண தேடல் விளம்பரங்களை
இலவசமாக பிரசுரித்துக்கொள்ள
அரிய வாய்ப்பு!

“உங்களுடைய அன்பான மகன் / மகளின் திருமணத்துக்கு பொருத்தமான துணையை தேடுகிறீர்களா? வட்ஸ்அப் ஊடாக எமக்கு விபரங்களை அனுப்பி வையுங்கள்!”



தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள எமது வட்ஸ்அப் இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

மேலதிக தகவல்களுக்கு
தொடர்புகொள்க : சுசி - 0115 886187

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900.
தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805
thamilaneditor@gmail.com

விவாஹா